பர்மா-மலாய் 0-1-3 இலங்கை-6 சதம்

TAMIL MANI REGD NO. M. 3384

தமிழ் மணி

சுதந்திரம் எனது பிறப்புரிமை

(வாரப் பதிப்பு)

எல்லாரு மோர்குலம் எல்லாருமோரினம்
எல்லாரு மிந்திய மக்கள்

எல்லோரு மோர்நிறை எல்லோரு மோர்விலை
எல்லோரும் இந்நாட்டு மன்னர்—பாரதி

மணி 4 | ஓசை 8 | சென்னை—வெகுதானிய ஞு மார்கழி மீ 17௳ ஞாயிற்றுக்கிழமை (1—1—39) | விலை அரையணு

வரவேற்புத் தலைவர்

THE NEWS MART, 182, MOUNT ROAD.

அடுத்த மார்ச்சு மாதம் திரிபுராவில் நடைபெற விருக்கும் 52வது இந்திய தேசிய காங்கிரஸ் மகாநாட்டுக்கு வரவேற்புக் கமிட்டித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கும் சேத் கோவிந்ததாஸ். இவர் இந்திய சட்டசபை அங்கத்தினர். தீவிர காங்கிரஸ் வாதி. வரவேற்புக் கமிட்டிக்குத் தலைவராக இருக்க முற்றிலும் தகுதியுடையவரே. இவர் தலைமையில் திரிபுரா காங்கிரஸ் ஏற்பாடுகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

அழகிய
கூந்தல்
அதிகமாக
வளரச்-
செய்வது

குல்பஹார் கூந்தல் தைலம்

உங்கள் ரோமத்தை எப்பொழுதும் வளம் பொருந்தியதாக வைத்துக்கொள்ளவும்

உங்கள் புத்தியைக் கூர்மையாக வைத்துக் கொள்ளவும்,

உங்கள் கண்களைக் குளிர்ச்சி பொருந்திய தாக வைத்துக்கொள்ளவும்

குல்பஹார் கூந்தல் தைலத்தையே உபயோகியுங்கள்.

கணக்கற்றவர்கள் அந்தத் தைலத்தை உபயோகித்து பயனடைந்திருக்கிறார்கள்

ஒரு புட்டி விலை அணா 14. தபால் செலவு வேறு.

3 புட்டி ரூ. 2-8-0 பிரிட்டிஷ் இந்தியாவுக்குள் தபால் செலவு இனாம்.

மொத்த வியாபாரிகளுக்குப் பிரத்தியேகமான விலையில் கொடுக்கப்படும்.

ஒவ்வொரு நகரிலும் ஏஜண்டுகள் தேவை.

முக்கால் அணா ஸ்டாம்பு அனுப்பினால் சாம்பில் இனாமாக அனுப்பப்படும்

தாஜ்முல் ஹூசேய்ன்,
வாசனை திரவியங்கள் உற்பத்தி செய்வோர், மௌண்ட் ரோட், மதராஸ்

டிரேட்மார்க்குகள் பெயர்கள் லேபில்களை
கல்கத்தா ரிஜிஸ்டர்
AGENTS ஜி. எ. ஓர்க்ஸ
...6. பந்தர் தெருவு மதராஸ்

வளையல் வாங்கலியோ வளையல் !

மதராஸ் டி. சி. என்
கோல்டன் மெடல் ஜ்வெல்லரி மார்ட்

பலவித அழகிய வளையல்கள்



அசல் தங்க வளையல்களை விட பிரகாசத்திலும் நிறத்திலும் குறைந்ததல்ல.

கறுக்காது.

2வருஷ உத்திரவாதம். மிகவும் அழகாக இருக்கும்

பெரிய சைஸ் 2 அகலமும் அதற்கு மேற்பட்டதும் ஜதை	ரூ. 3 0 0
மத்திய சைஸ் $1\frac{3}{4}$" முதல் 2"க்குள் ஜதை	ரூ. 2 8 0
குழந்தை சைஸ் $1\frac{3}{4}$-க்கு உட்பட்டது ஜதை	ரூ. 2 0 0
வி. பி. செலவு 1 ஜதை முதல் 6 ஜதை வரை	அணா 8

அணிந்திருக்கும் வளையலின் சுற்றளவை இங்கியால் ஒரு காகிதத்தில் குறித்து அனுப்பவும்

குறிப்பு:- "தமிழ் மணி" பெயரைக் குறிப்பிட்டு எழுதுகிறவர்களுக்கு மாத்திரம் விலையில் ரூபாய்க்கு ஒரு அணா வீதம் கமிஷன் கொடுக்கப்படும்.

2 அணா பெறுமானமுள்ளதும், பல அழகிய படங்களுள்ளதுமான எமது கேட்லாக் இனாம்.

குறிப்பு:—சிலோன், பர்மாவுக்கு வி. பி. சார்ஜு அணா 12. மலேய நாட்டுக்கு ரூ. 2. மேற்கண்ட வெளிநாட்டு ஆர்டர்களுக்கு பூரா கிரயமும் தபால் செலவும் ஆர்டருடன் அனுப்பவேண்டும்.

டி. சி. நாகலிங்கப்பா அண்டு கோ,
280, வால்டாக்ஸ் ரோடு, பார்க் டவுன் மதராஸ்.

ஏஜண்ட்:— க. தர்மலிங்க முதலியார்,
நெ. 101, இராஜவீதி, குமரகோஷ்டம் பக்கத்தில். பெரிய காஞ்சீபுரம்.

ஜெர்மன் ரிப்பீடிங் அலாரம் பிஸ்டல்



இது நூதன முறையில், உயர்தர எஃகுத் தகட்டினால் தயாரித்தது. உள்ளே பலத்த ஸ்பிரிங், ஆக்ஷனுடன் அமைக்கப்பட்டது ஏககாலத்தில் எட்டு அல்லது பத்து வெடிகள் உடனுக்கு உடனே, கனத்த சப்தத்துடனும், நெருப்புடனும், புகையுடனும் கிளம்பி, எதிரிகளை பிரமிக்கச் செய்யும். இது உண்மையில், ஒரு பெரிய கைத் துப்பாக்கிக்கு ஒப்பானது.

50 கேப்புகளுடன் கூடிய பிஸ்டல் விலை ரூ. 3-0-0

தபால் செலவு பிரத்தியேகம். தனியே கேப்புகள் 50-க்கு ரூ. 1.

எமது விலாசம்: பக்தா அண்டு கம்பேனி,
1-24, ஆயலூர் முத்தையா முதலி தெரு, சென்னை.

தேவை
ஏஜண்டுகள் தேவை :-:

சர்ச்லைட் கட்டிங் டைமன்ஸ்

இயற்கை வைர சிறப்பு இதுவே என போற்றப்பெற்றது. உலகத்தில் அநேகம் பெயர் பெற்ற வைரங்கள் இருக்கின்றன. ஆனாலும், எமது வைரங்கள் உயர் வைரத்தை அடைந்ததில்லை ஏனெனில் உழைப்பு, உறுதி, கனம், பூரிப்பு எல்லாம் ஒருங்கே அமையப் பெற்றது. சீமைக் கமலச் சிறப்பை சிக்கன முறையில் அடைதற்கு. திருப்தி அடையும்படி ரசாயன சாஸ்திர ஆராய்ச்சி நிபுணரால் கண்டு பிடிக்கப்பட்ட

சர்ச்லைட் வைரங்கள்

தோடு சைஸ் கமலம் 1-க்கு	0—8—0	குறைந்த கிரயத்திற்கு விற்று வருகின்றோம்
கடுக்கன் சைஸ் கமலம் 1-க்கு	0—7—0	
பேஸர் சைன் கமலம் 1-க்கு	0—6—0	

குறிப்பு:-சர்ச்லைட் வைரங்கள் எங்களிடமும் எங்கள் உரிமை பெற்ற ஏஜண்டுகளிடமும்தான் கிடைக்கும்.

வெளியூர் ஆடர்களை உடனுக்குடன் கவனித்து அனுப்பப்படும்.

ஒரு முறை ஆடர் செய்து உண்மையுணரக் கோருகின்றோம்.

எங்கள் ஏஜண்டுகள் :— 1 A. துரைசாமி நாய்க்கர், பெரிய காஞ்சீபுரம். 2 T. P. N ராஜன் & கோ, மதுரை. 3 G. நாராயணசாமி நாயுடு, தஞ்சாவூர். 4 M. M. அப்துல் காதர் பருத்தித்துரை (சிலோன்)

விவரங்களுக்கு .— சம்சுதீன் அண்டு இஸ்மாயில், 94-96, மின்ட் ஸ்ட்ரீட், சௌக்கார்பேட்டை, மதராஸ்.

சொக்கநாதன்

தொடர் கதை

சொக்கன் கடிதம்

தஞ்சை அரண்மனை தோட்டத்திலுள்ள பழைய மண்டபத்தை நோக்கி மான்குட்டி போல் துள்ளியோடிய இளங் குறத்தி, மண்டபம் அடைந்ததும் அங்கு நின்று சுற்றுமுற்றும் பார்த்தாள். வேறு யாரும் கண்ணுக்குத் தென்படவில்லை. மெதுவாக உட்புறஞ் சென்று, அங்குள்ள அந்தரங்க அறையைத் திறந்து சட்டென உள்ளே சென்றாள். அறையினுள்ளிருந்த ரங்கன் அவளை ஆவலோடு வரவேற்றான்.

"கமலா, உனக்கு குறத்தி வேஷம் எவ்வளவு பொருத்தம்! நானும் குறவன் வேஷம் போட்டுக்கொண்டால் எப்படியோ நமக்குப் பிழைப்பு நடக்கும்! இந்த அவதியே வேண்டாம், இல்லையா?..."

"அதைப்பற்றி அப்புறம் பேசிக்கொள்ளலாம். என்ன அவசரமாக தஞ்சைக்கு வந்தீர்கள்? சொக்கர் முதல் யாவரும் சுகந்தானே?"

"சொக்கர் சுகமே இருக்கிறார். அவசரமாகத்தான் இங்கு வந்தேன்...நான் மதுரையிலிருப்பதாகப் பலர் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்."

"சொக்கர் அறியாமலா இங்கு வந்தீர்கள்?"

"அது முடிந்த காரியமா? அவர் அனுமதி பெற்றே இங்கு வந்தேன்...பொறு...இதோ சொக்கர் மோகனாவுக்கு ஒரு கடிதம் கொடுத்திருக்கிறார். அதைப் பத்திரமாகக் கொடுத்து விடு; எச்சரிக்கை!"

"சரி, கொடுத்து விடுகிறேன்... அப்புறம்..."

"அப்புறம் ஒரு நல்ல செய்தி!... மதுரை ராணுவ தளகர்த்தர் சில குறிப்பிட்ட வீரர்களுடன் தஞ்சைக்கு வந்திருக்கிறார்..."

"தஞ்சைக்கா? யுத்தம் ஆரம்பிக்கவா? ஐயோ!..."

"கமலம் ஏன் அவசரப் படுகிறாய்? பொறு...பெண் புத்தியைக் காட்டி விட்டாயே!"

"இல்லை. இல்லாவிட்டால் தளகர்த்தருக்கும், வீரர்களுக்கும் இங்கு என்ன வேலை?..."

"வேறு வேலை கிடையாதா? யுத்தத்துக்குத்தான் தளகர்த்தர்கள் பிறந்திருக்கிறார்களா ? அப்படி எண்ணாதே. அவர்கள் ஒரு சுபகாரியத்துக்காக வந்திருக்கிறார்கள்"

"சுபகாரியத்துக்கா? அப்படியானால் பாட்டி ஜோசியம் பலித்து விட்டது!"

"ஆம்; சொக்கருக்கு மோகனாவைக் கலியாணஞ் செய்து கொடுக்கும்படி தஞ்சை அரசரைக் கேட்க வந்திருக்கிறார்கள். அந்த தூதுக் கோஷ்டிக்குப் பேர்பெற்ற மதுரை தளகர்த்தர் வீரசிங்கன் தலைமை வகித்து வந்திருக்கிறார்."

"வீரசிங்கனா? ஆம் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர் எங்கள் அப்பாவுக்கு நண்பராம்!"

"உங்கள் அப்பாவுக்கு மட்டுமல்ல, உங்கள் அப்பா, பாட்டனுக்குக் கூட நண்பர். பெரிய வீரர்... சிறந்த ராஜதந்திரி...ஆகையால் இந்த சுபகாரியத்துக்கு அவரே புறப்பட்டு வந்திருக்கிறார்."

"அதிருக்கட்டும்; நீங்கள் ஏன் வந்தீர்கள்?"

"அவர்களைப் பாதுகாக்க நான் வந்தேன். தளகர்த்தர் முதல் இதர மதுரை வீரர்களின் உயிருக்கு ஆபத்து வராமல் தடுக்கவே நான் வந்தேன். அவன் அங்கப்பன் யாரென்பது உனக்குத் தெரியும்."

"ஆம், ஆம்; நல்ல காரியஞ் செய்தீர்கள்...அவர்கள் எங்கே தங்கியிருக்கிறார்கள்?".

"நகருக்கு தெற்கேயுள்ள பெரிய சத்திரத்தில மாறு வேஷத்துடனிருக்கிறார்கள். அவர்களை யாரும் கண்டு கொள்ள முடியாதபடி நாட்டுப் புறத்தார் போல் மாறு வேடம் தரித்திருக்கிறார்கள் நான் இந்தப் பிச்சைக்கார வேஷத்துடன் அவர்களைப் பாதுகாக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்து விட்டுத்தான் இங்கு வந்தேன்..."

"ரொம்பச் சரி...உங்கள் வேஷமும்!...அது போகட்டும்; நீங்கள் அஜாக்கிரதையாக இருக்கக் கூடாது. அங்கப்பன் வஞ்சகன்; தளகர்த்தர் எப்போ அரசரிடம் வரப் போகிறார்?"

"இப்போது வரமாட்டார் சிறிது ஆலோசித்தே வருவார். எப்போது என்று என்னால் கூறமுடியாது...அப்புறம் கூறுகிறேன்."

"உங்கள் இஷ்டம்; இப்போ என்னை அழைத்த காரணம்?"

"காரணங்கள் பல உண்டு. முதலில் மோகனா கடிதம்...இரண்டாவதாக முன்னெச்சரிக்கையாயிருக்கும்படி அறிவிக்கத்தான்...அடிக்கடி சந்தித்துகொள்ளவேண்டியிருக்கிறது...அரண்மனை நிலைமை எப்படி?"

"பழைய குருடிதான்!...அதைப் பற்றிக் கேட்கவும் வேண்டுமா?"

"தெரிந்ததுதான்; புதிதாக ஏதேனும் மாற்றங்கள் ஏற்பட்டிருக்குமோ வென்றுதான் கேட்டேன்"

"ஆம்; ஒன்றுண்டு... அங்கப்பனுக்கு மோகனாவைக் கலியாணஞ் செய்து வைக்க ராணியும், மகாராஜாவும் பெரிதும் முயற்சி யெடுத்து வருகிறார்கள்."

"அப்படியானால் மதுரை தூது வருவதால் பிரயோஜனமில்லை."

"ஆம்; அதைப்பற்றிதான் சிந்தித்துக் கொண்டிருந்தேன். தூது வெற்றி பெறாது போனாலும் பாதகமில்லை...ஆனால், அதனால் அனர்த்தங்கள் விளையக்கூடாதென்றுதான் யோசிக்கிறேன்."

"அந்த அனர்த்தங்களுக்குப் பயந்தே நான் இங்கு அவசரமாக வந்தேன்."

"உங்களால் தடுக்க முடியுமா?"

"தடுக்கவே வந்தேன்...".

"யுத்தத்தையா?"

"கூடுமான வரையில் முயற்சிப்பேன். ஆனால்..யுத்தம் வந்துதான் தீருமென்று நினைக்கிறேன் ..."

"நிச்சயமாக வந்துதான் தீருமா? அப்படியானால் தஞ்சை, மோகனா நமது கதியென்ன?"

"அதைப்பற்றி ஒன்றுக்கும் பயப்படவேண்டாம். சில யோசனைகள் போட்டிருக்கிறேன் அதைப்பற்றி அப்புறம் பேசிக் கொள்ளலாம். எனக்கு நேரமாகிறது..."

"அப்படி அவசரமான காரியமா? மீண்டும் எப்போது சந்திப்போம்?"

"பாட்டியிடம் சொல்லி யனுப்புகிறேன். கமலம் போய் வா. எச்சரிக்கையாகக் காரியங்களைக் கவனித்துக் கொள். ஒன்றுக்கும் அஞ்ச வேண்டாம். எல்லாம் கடவுளிருக்கிறார்! குறத்தி வேஷத்தோடுதானே போகிறாய்?" என்று கேட்டுக் கொண்டே ரங்கன் புன்னகை செய்தான். கமலாவை அன்புடன் முத்தமிட்டு அனுப்பி வைத்தான்

கமலா அந்தரங்க அறையிலிருந்து வெளியேறினாள் தோட்டத்தில் குறத்திவேஷத்துடன் சிறிது நேரம் நின்று ஆலோசித்தாள். மெதுவாக அரண்மனையை நோக்கி நடந்தாள் தோட்டத்திலுள்ள ஒரு பெரிய புதருக்குள் மறைந்தாள். அந்தப் புதருக்கும் கமலாவின் அறைக்கும் ரகசிய வழியொன்றுண்டு இந்த வழி கமலாவைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது, அவளுடைய காதலனாகிய ரங்கன் கூட அறியமாட்டான்; மோகனாவுக்கும் தெரியாது. வேணுமென்றே இந்த ரகசியத்தைக் கமலா மறைத்து வைத்திருந்தாள். பிற்காலத்தில் ஆபத்துக்கு இந்த வழி உதவுமென்பது அவள் கருத்து. அந்த ரகசிய வழியாக நேரடியாக அவள் அறைக்குச் சென்றாள். அங்கு குறத்தி வேஷத்தை மாற்றியபின், நேரடியாக மோகனா அறைக்குச் சென்றாள்.

மோகனாவும் பாட்டியும் கமலத்தின் வரவை ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். கமலத்தைக் கண்டதும், மோகனா துள்ளி குதித்து எழுந்திருந்தாள்.

"கமலா, என்ன விசேஷம்? இவ்வளவு நேரம் தாமதமென்ன?"

"அப்படி நெடுநேரமாகி விட்டதா? உங்கள் எண்ணந்தான்... நான் சிறிது நேரந்தானே பேசிக்கொண்டிருந்தேன்..."

"ரங்கன் எங்கே?...மதுரை விசேஷமென்ன? அத்தான்..."

"அத்தானிடமிருந்து விசேஷம் கிடைத்திருக்கிறது...ரங்கன் அவசர வேலையாகப் போய்விட்டார்..."

"அத்தானிடமிருந்து விசேஷமென்ன? ரங்கன் வேறு என்ன சொன்னார்?...உம்..."

"இதோ அத்தான் கடிதம் கொடுத்து அனுப்பி யிருக்கிறார்கள்...அதை வாசியுங்கள்; அப்புறம் மற்ற கதைகளைக் கூறுகிறேன்..." என்று கமலம் மடியில் பத்திரமாக வைத்திருந்த கடிதத்தை எடுத்து மோகனாவிடம்கொடுத்தாள். மோகனாவின் மனம் பதை பதைத்தது. கமலம் கொடுத்த கடிதத்தை ஆவலோடு வாங்கினாள். அவள் கரங்கள் நடுங்கின. முதல் காதல் கடிதமல்லவா? அவள் கண்களில் கண்ணீர் நிறைந்திருந்தது. கரங்கள் நடுங்க கடிதத்தைப் பிரித்தாள். சிறிது நேரம் அப்படியே அசைவற்றிருந்தாள். அவள் கண்கள் கடிதத்தை நோக்கின. ஆனால், கடிதத்தி

(அடுத்த பக்கம் பார்க்க)

அனுபோக தமிழ் வைத்திய
: முறைகள் :
புஸ்தகம் 1-க்கு தபால் கூலியுள்பட ரூ. 1-4-0 முன்பணமனுப்புக.
புஸ்தகம் வாங்குபவர்கள் 250 அதிர்ஷ்ட பரிசுகளிலொன்றுக்கு எதிர்பார்க்கலாம். முதற் பரிசு 10 சவரன் செயின்.
முழு விவரங்களுக்கு 1 அணா ஸ்டாம்பு அனுப்புக.
T. சிவப்பிரகாச ஆச்சாரி,
24, ஆலத்தூர் சுப்ரமணிய ஆச்சாரி தெரு, சூளை, மதராஸ்.
கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

போலி மார்க்கு சுருட்டுகளைக் கண்டு உஷார்! எங்கும் கீர்த்தியுடன் விளங்குவது


விநாயகர் மார்க்கு சுருட்டுகள்
ஊ. ஆறுமுக செட்டியார், நெ. 13, அண்ணாபிள்ளை தெரு, ஜி. டி. மதராஸ்.

சொக்கன் கடிதம்

(முன் பக்கத் தொடர்ச்சி)

லிருந்த ஒரு எழுத்துக்கூட அவள் கண்களுக்குத் தெரியவில்லை. ஒவ்வொரு எழுத்தும், அவளுக்குப் பத்துப் பதினைந்து எழுத்துக்கள் போல் தோன்றின. ஒவ்வொரு எழுத்தும் சொக்கரின் சொரூபமாகவே விளங்கியது இந்நிலைமையில் மோகனா கடிதத்தை வைத்துக் கொண்டு ஓரே பார்வையாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

மோகனா நிலைமையைக் கண்ட கமலமும், பாட்டியும் ஒன்றும் பேசவில்லை. மௌனமாக உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். மோகனா மனம் பட்ட பாட்டை அவர்கள் நன்கறிவார்கள். ஆகவே, அவர்கள் மோகனாவை உற்றுக் கவனிப்பதை விட்டு வேறு பக்கமாகத் திரும்பி உட்கார்ந்து கொண்டனர். மோகனாவின் நிலைமையில் சிறிது மாறுதல் ஏற்பட்டது. அவள் புத்தி ஒரு நிலைக்கு வந்தது மங்கியிருந்த அவள் கண் பார்வை சிறிது தெளிவடைந்தது. மனதைத் திடப்படுத்திக் கொண்டு கடிதத்தை வாசித்தாள்.

அன்புள்ள மோகனா,

உன்னைப் பிரிந்த நிமிஷம் முதல் என் உயிர் ஒரு நிலையிலில்லை. என் உயிரும், எண்ணமும் உன்னிடமே பதிந்து கிடக்கிறது. கண்ணே! உன்னை பிரிந்து எப்படி இந்த உயிர் தரிப்பேன்? நீயும், இதே கவலைக்குள்ளாகி வருந்துவா யென்பது எனக்குத் தெரியும். எனினும், தைரியமாக இரு. நமக்கு நல்ல காலம் நெருங்கி வருகிறது

தஞ்சையிலிருந்து புறப்பட்டதும் நேரடியாக மதுரைக்கு சுகமே வந்து சேர்ந்தேன். பாட்டி மங்கம்மாள் ராணியையும், என் தாயாரையும் கண்டேன். உன்னைக் கண்டதும் காதல் கொண்டதும் முதலிய சகல ரகசியங்களையும் அவர்களிடம் கூறினேன் நான் எதிர்பாராத விதமாக அவர்கள் இருவரும் உன்மீது அளவற்ற அன்பு கொண்டிருக்கிறார்கள். நான் உன்னையே மணக்க வேண்டுமென்று தீர்மானித்திருக்கிறார்கள். உன் தந்தையிடம் தூதுவரை அனுப்பியிருக்கிறார்கள். அவர்கள் சீக்கிரம் தஞ்சை வந்து சேருவார்கள். அதற்கு மேல் என்ன நடக்குமென்பது தெரியவில்லை. உண்மை அன்புக்கு ஒரு போதும் அழிவில்லை தெய்வம் விட்ட வழி நடக்கட்டும் அஞ்ச வேண்டாம். எல்லாம் நன்மையாகவே முடியுமென்ற நம்பிக்கையுடன், சந்தோஷமாக இருக்க வேண்டும். மற்ற விவரங்களை ரங்கன் தெரிவிப்பான்.

உன் உயிருக்குயிரான அத்தான்,
சொக்கன்.

கடிதத்தை வாசித்த மோகனா கண்களில் ஆனந்தக் கண்ணீர் வழிந்தோடியது. அவள் காதலன் கடிதத்தை மார்போடு அணைத்துக் கொண்டு படுக்கையில் சாய்ந்தாள்; கண்களை மூடினாள் சொக்கன் தியானத்தில் ஆழ்ந்தாள். அவள் அருகிலிருந்த பாட்டியையும், கமலாவையும் மறந்தாள்.

மோகனாவின் நிலைமையைக் கண்ட பாட்டியும், கமலாவும் சிறிது கலங்கினார்கள். கடிதத்தில் என்ன எழுதியிருக்குமோவென்று பயந்தார்கள். எனினும், அவர்கள் இருவரும் மோகனாவுக்குத் தொந்திரவு கொடுக்க விரும்பவில்லை. அந்த விடத்திலேயே சிறிது நேரம் மௌனமாக உட்கார்ந்திருந்தனர் கமலம் மெதுவாக மோகனா அருகில் நெருங்கினாள். அவள் மனம் துடித்தது. அருகில் உட்கார்ந்து கொண்டு மோகனாவின் தலையைத் தடவிக் கொடுத்தாள். சிந்தனை உலகில் மூழ்கி யிருந்த மோகனா மெதுவாகக் கண்களைத் திறந்தாள் கமலாவின் வாடிய முகத்தைக் கண்டு ஆச்சரியமடைந்தாள். மறு விநாடியில் அவள் முகத்தில் புன்னகை தாண்டவமாடியது.

"கமலம், ஏன் உன் முகம் வாடியிருக்கிறது? அக்காள் மோகனாவுக்குச் சஞ்சலமென்று நினைத்தாயோ?"

"உங்கள் கண்களில் கண்ணீர் வடிந்தோடியதைக் கண்டு அவ்வாறு சந்தேகிக்க நேர்ந்தது."

"அப்படி ஒன்றுமில்லை... அது ஆனந்தக் கண்ணீர்! அத்தான் கடிதத்தை நீயே பார். அதில் உனக்கும் உரிமையுண்டு" என்று கூறி மோகனா சொக்கன் கடிதத்தை கமலாவிடம் கொடுத்தாள். கமலம் ஆவலுடன் கடிதத்தைப் படித்தாள். அவள் முகத்திலிருந்த கவலையெல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல் பறந்தது; புன்னகை செய்தாள்.

"அத்தான் அருமையாகக் கடிதம் எழுதி யிருக்கிறார்கள்."

"ஆம், அத்தானுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டுமா? ராஜ தந்திரியல்லவா? தந்திரமாகச் சில வார்த்தைகள் போட்டிருக்கிறார்."

"ஆம்... இந்த நிலைமையில் அத்தான் இதைவிட வேறு என்ன தான் எழுத முடியும்?..."

"ஏன் கமலா! அத்தானுக்கு சிபார்சு செய்யப் புறப்பட்டுவிட்டாயா?"

"சிபார்சு ஒன்றுமில்லை... உள்ளதைக் கூறினேன்..."

"சரி அத்தானிடம் இதைக் கண்டிப்பாகக் கூறுவேன்... கமலா! அது போகட்டும் ரங்கன் வேறு என்ன சொன்னான்?

அதைக் கேட்க மறந்து போனேன்."

இந்நேரத்தில் பாட்டி குறுக்கிட்டாள்.

"அடி கமலா! நீ மட்டும் உன் அத்தான் கடிதத்தை வாசித்துச் செய்தி அறிந்து கொண்டாய்... பாட்டியை நினைத்தீர்களா? என் பேரன் மதுரை சொக்கநாதர் கடிதத்தை வாசிக்க எனக்கு உரிமையில்லையா? என்ன வஞ்சகமடி இது?"

மோகனாவும், கமலமும் நகைத்தார்கள்.

"அந்தக் கடிதத்தை பாட்டியிடம் கொடுத்துவிடு கமலா" என்றாள் மோகனா.

"உனக்குப் படிக்கத் தெரியுமா பாட்டி?" என்றாள் கமலம்.

'ஏண்டி! நீ தான் படித்தவள் என்று நினைத்துக் கொண்டாயா? என்ன கர்வம் பார்!"

"இதோ பாட்டி, நீயே படித்துக் கொள்" என கமலம் பாட்டியிடம் கடிதத்தைக் கொடுத்தாள். பாட்டி அக்கரையுடன் கடிதத்தைப் படித்துப் பார்த்து விட்டு 'உம்" கொட்டினாள். கடிதத்தை மீண்டும் கமலாவிடம் கொடுத்தாள். கமலத்தினிடமிருந்து கடிதத்தை மோகனா பத்திரமாக வாங்கி வைத்துக் கொண்டாள்.

"கமலம், ரங்கன் கூறிய செய்தி என்னிடம் கூறவில்லையே?"

"ஆம், ரங்கனும் என்னிடம் விவரமாக எதுவும் கூறவில்லை... அவர் அவசர ஜோலியாக வந்திருக்கிறார். ஆதலால் அவசரமாகப் போய் விட்டார்... அப்புறம்..."

"என்ன அவசர ஜோலி?"

"அத்தான் கடிதத்தில் கண்டபடி, மதுரையின் பெரிய ராணுவ தளகர்த்தரான வீரசிங்கன், சில குறிப்பிட்ட மதுரை வீரர்களுடன் தஞ்சைக்கு வந்திருக்கிறார்."

"வந்து விட்டார்களா? எப்போ...?"

'நேற்றுத்தான் வந்து சேர்ந்திருப்பார்களென்று நினைக்கிறேன்."

"அப்படியானால் இன்னமும் தஞ்சை அரசரிடம் ஏன் தூது வரவில்லை?'

"ஏதேனும் காரணம் இருக்கலாம் வீரசிங்கன் லேசான பேர்வழியல்ல. பெரிய அரசியல் தந்திரி... எதையும் தீர்க்கமாக ஆலோசித்தே செய்பவர்."

"இதில் தீர 'ஆலோசிக்க வேண்டிய காரியம் என்ன இருக்கிறது?'

"பல காரணங்கள் உண்டு"

"ரங்கன் ஏன் வந்தான்?... அதைப் பற்றி ஒன்றும் கூறவில்லையா?"

"அவர் மதுரை வீரர்களைக் காப்பாற்ற... அதாவது, தஞ்சை சதிகாரர்களால் அவர்களுக்கு ஆபத்து ஏற்படாமல்' தடுக்கவே வந்திருக்கிறார்..."

"நல்ல யோசனைதான்... அத்தானே அனுப்பிவைத்தார்களா?

"ஆம் அத்தான் சம்மதத்தைப் பெற்றே வந்திருக்கிறார்."

"எப்போதான் தூது வரப் போகிறார்கள்?"

"அதே கேள்வியையே நானும் கேட்டேன்... அதைப்பற்றிப் பின்னால் அறிவிப்பதாகக் கூறினார். ரங்கன் அந்தரங்கமாக வேலை செய்து வருகிறார்...."

ரங்கனைப் பற்றி சந்தேகிக்கவே வேண்டாம். தஞ்சையின் இரட்சகன் ரங்கன்! இவ்வளவு சிறு வயதில், இவ்வளவு சாதுர்யம் நிறைந்த வாலிபனை நான் கண்டதே இல்லை. ஏன் கமலம், நீ அறியாததல்ல! நாம் மூவரும் சிறு வயது முதல் ஒன்றாக வளர்ந்தவர்கள். ரங்கனின் சாதுர்யத்தை அப்போதே நாம் அறியவில்லையா?"

"மோகனா ரங்கன் சாதுர்யத்தை ஓரேயடியாகப் புகழ்ந்து பேசுகிறாயே!" என்றாள் பாட்டி.

"ஆம்... அது பாட்டிக்குப் பெருமை... எங்களை வளர்த்த தாய்க் கிழவியல்லவா?"

"ஏன், ரங்கன் பெருமை கமலாவுக்கு ஆனந்தமில்லையா?"

"இல்லாமலென்ன! ஏன் கமலம் வாய் திறந்து பேசேன்."

"அவளுக்கு நாணம் வந்துவிட்டது."

"பாட்டி சும்மா இரு... கமலம்! அப்புறம் உன் யோசனைதான் என்ன?"

"நான் அவரை மீண்டும் சந்திக்க வேண்டியிருக்கிறது."

"யாரை ரங்கனையா?"

"ஆம்... அவர் வரும்படி கூறினார்..."

"ரங்கனைப் பார்ப்பதென்றால் விழுந்தடித்துக் கொண்டு ஓடுவாள்.. கமலம்... எப்போ போகப் போகிறாய்?" என்றாள் பாட்டி

"பாட்டி! உனக்குக் குறும்புத்தனம் அதிகம். சரி வீட்டிற்குப் போ... ரங்கன் காத்திருப்பார். அவரைக் கண்டு பேசியபின் சீக்கிரம் வந்து எனக்குத் தகவல் தெரிவிக்க வேண்டும்..."

"சரி... போய் வாரேன்... கிழவி உங்களோடு இருப்பது உங்களுக்குப் பிடிக்கவில்லைபாக்கும்..." என்று தமாஷாகக் கூறிக்கொண்டே பாட்டி அங்கிருந்து புறப்பட்டாள்.

(தொடரும்)


கவர்ன்மெண்ட், ரயில்வே, பாங்கு, கோவாபரேடிவ் சொஸைடி, வியாபாரிகளுக்கும் சப்ளையர்கள்

ஜெ. கன்னையா கம்பெனி
இரும்புப்பெட்டி வியாபாரம்
137, பிராட்வே, மதுரை

காரம், மணம், குணம், நிறம், ஒருங்கே அமைந்த
வி. என். ஷண்முகம் பட்டணம் பொடியை
எப்பொழுதும் உபயோகியுங்கள்
நெ. 8, ஆச்சாரப்பன் சந்து, மதராஸ். (ஏஜண்டுகள் தேவை)

: அடுத்த ஆபத்து? :

ஹிட்லரின் அடுத்த பாய்ச்சல்!

ரஷியாவுக்குக் கிழக்கே யுக்ரெயன் பிரதேசமொன்றிருக்கிறது. இது போலந்து, ஜெக்கோ, ருமேனியா முதலிய தேசங்களின் எல்லையைச் சார்ந்தது. இந்த யுக்ரெய்ன் பிரதேசத்தில் ருதேனியா என்னும் மற்றொரு சிறு தேசமுண்டு. இதின் தலைநகரம் ஸூஸ்ட் என்பது ஆஸ்திரியாவையும், ஜெக்கோவையும் கைப்பற்றிய ஹிட்லரின் கண்ணோட்டம் ருதேனியா, யுக்ரெய்ன்மீது தற்போது பாய்ந்திருப்பது ஒரு விசேஷம். அவர் கண்ணோட்டம் அந்தத் தேசங்களின் மீது பாய்வதற்குக் காரணமுண்டு.

பிரிட்டன் தாளம்!

பிரிட்டனும், பிரான்சும் ஹிட்லருக்குத் தாளம் போடுகின்றன. அந்த இரு தேசங்களைப்பற்றி ஹிட்லருக்குப் பயமே இல்லை. அவை இரண்டும் ஹிட்லர் ஆட்டி வைக்கும் பொம்மைகள். ஆனால், ரஷியா அப்படியல்ல; ரஷியாவுக்கு ஜெர்மனிமீது துவேஷமுண்டு; ஹிட்லருக்கு ரஷியாமீது துவேஷமுண்டு. ஆனால், ரஷியாவை நெருங்க ஹிட்லருக்கு அதிகப் பயம். ஜெக்கோ விஷயத்தில் ரஷியா, ஜெர்மனியை எதிர்க்கத் தயாராக இருந்தது. பிரிட்டனும், பிரான்சும் ரஷியாவை கலந்து கொள்ளாமல், ரஷியாவை ஒதுக்கி வைத்ததால், ரஷியா ஜெக்கோ விஷயத்தில் பிரவேசிக்கவில்லை. ஆனால், ரஷியாவினால் ஜெர்மனிக்கு எப்பொழுதும் ஆபத்து என்பதை ஜெர்மனி உணர்ந்தேயிருக்கிறது. இதை உணர்ந்தே, ஹிட்லர் ரஷியாவை எதிர்க்க மறைமுகமாகச் சூழ்ச்சி செய்து வருகிறார். யுக்ரேய்னையும் ருதேனியாவையும் தட்டிக்கொடுத்து வருகிறார். ருதேனியாவையும் சேர்த்து, யுக்ரேய்னில் ஒரு பொம்மை "ஜார்" மன்னரை ஏற்படுத்த வேலைசெய்து வருகிறார். மஞ்சுகோவில் ஜப்பான் ஒரு பொம்மை மன்னரை சிருஷ்டித்திருப்பது போல், யுக்ரேய்னில் ஒரு ரஷிய பொம்மை மன்னரைச் சிருஷ்டிக்க ஹிட்லர் உத்தேசித்திருக்கிறார். ஹிட்லர் உத்தேசத்துக்கு இசைந்தாற்போல் ஒரு நபரும் கிடைத்திருக்கிறார். அவரே ரஷிய கிரேண்ட் டியூக் விலாடிமர். ரஷியாவுக்கு மீண்டும் ஒரு சக்கிரவர்த்தியாகவேண்டுமென்பது இவர் எண்ணம். இவர் ரஷிய ஜார் மன்னர் குலத்தில் வந்தவர். இவரையே யுக்ரெய்னுக்குப் பொம்மை மன்னராக்க ஹிட்லர் எண்ணியிருக்கிறார். இதற்காக ஹிட்லர் என்ன சூழ்ச்சி செய்து வருகிறார் தெரியுமா? ருதேனியாவையும், யுக்ரேய்ன்வாசிகளையும் தூண்டிவிட்டுக், கிளர்ச்சி செய்யப் பொருளுதவியும் செய்துவருகிறார்.

ஹிட்லருக்குச் சரணாகதி யடைந்து, ஐரோப்பிய சிறு தேசங்களைக் காட்டிக் கொடுத்த பிரிட்டிஷ் முதன் மந்திரி சேம்பர்லேன்.

இலங்கையை அழிக்க ஒரு அனுமார் அவதாரஞ் செய்தார்; ஐரோப்பாவுக்குத் தீ மூட்ட ஒரு ஹிட்லர் பிறந்திருக்கிறார். ஐரோப்பாவை மட்டும் மல்ல. உலகத்தை ஜெயித்து, சந்திர லோகத்தையும் ஜெயிக்க அவர் பாய்கிறார். அவர் எண்ணம் கை கூடுமா? ஒருபோதும் கைகூடாது. ஒரு வேளை அது அவருடைய அழிவு காலத்துக்கே காரணமாக இருக்கலாம்.

வெறும் உருட்டல் மிரட்டலால் ஹிட்லர் காரியஞ் சாதித்துக் கொண்டு போகிறார். ஐரோப்பிய வல்லரசுகளும் அவருக்கு இடங்கொடுத்துக் கொண்டிருக்கின்றன. ஹிட்லர் இப்பொழுது ஒரு புதிய சூழ்ச்சியில் இறங்கியிருக்கிறார். ஒரு வேளை அதுவே உலக சமாதானத்துக்கு ஆபத்தாக வந்து முடியலாம். அடுத்த யுத்தத்துக்கும் அதுவே காரணமாக இருக்கலாம்.

ஹிட்லர் சூழ்ச்சி

ருதேனியாவின் தலை நகரான ஸூஸ்ட்தான் ஆபத்தான நகரம்! அங்கிருந்துதான் ஐரோப்பாவுக்கு ஆபத்து ஏற்படலாம். ஜெக்கோ ஒரு ஆபத்தான இடமாக இருந்தது. ஹிட்லர் சூழ்ச்சியாலும், சேம்பர்லேன், டலாடியர் முதலியோரின் சரணாகதியாலும் அந்த ஆபத்து வராமல் நின்றது. ஆனால், ருதேனியா அடுத்த ஆபத்தான இடமாக இருக்கலாம். ஒரு ஐரோப்பிய யுத்தம் ஏற்படுமேயானால் அதற்கு ருதேனியாவே காரணமாக இருக்குமென்பது அரசியல் வாதிகள் கருத்து.

பொம்மை "ஜார்" வருவாரா?

ருதேனியாவின் தலை நகரான ஸூஸ்டில் யுக்ரேய்னின் சுதந்திரக் கொடியை ஏற்றி இருக்கிறார்கள். அந்த சுதந்திரக் கொடியின் கீழ் ருதேனியா, யுக்ரெய்ன் வாசிகள் சுமார் $4\frac{1}{2}$ கோடிப் பேர் சேர்ந்துகொள்ள துணிவுகொண்டிருக்கிறார்கள். இவர்களுக்குத் துணைச் செய்ய ஹிட்லர், உறுதி கொண்டிருக்கிறார். ஆகவே, ருதேனியாவுக்கு ஜெர்மன் ஸ்தானிகர் ஒருவரை அனுப்பி, ருதேனியா ஏழைகளுக்கு உதவியாக 8500 பவுனும் கொடுத்து இருக்கிறார். யுக்ரேய்ன் சுதந்திரவாதிகளை ஜெர்மன் பாதுகாப்பில் வைத்துக்கொள்ள ஹிட்லர் வாக்குறுதி கொடுத்திருக்கிறாராம்!

யுக்ரேய்ன் சுதந்திரம்

யுக்ரேய்ன் ஒரு சுதந்திர தேசமாகுமேயானால், அந்தச் சுதந்திர தேசத்தில் 7 லக்ஷம் ருதேனியர் சேர்ந்து கொள்ளுவார்கள். யுக்ரேய்னில் வசிக்கும் 70 லக்ஷம் போலந்து வாசிகளும், 10 லக்ஷம் ருமேனியரும் சேர்ந்துகொள்ள உறுதிகொண்டிருக்கின்றனர். ஆனால், இதற்கு ரஷியா இடங் கொடுக்குமா? அதுதான் சந்தேகம். போலந்தும் யுக்ரேய்ன் சுதந்திரத்தை விரும்பாது. ஏனெனில், யுக்ரேய்ன் பிரதேசம் அதிக செழிப்புடையது. ரஷியா போலந்து முதலிய தேசங்களுக்கு வேண்டிய, இரும்பு, நிலக்கரி, எண்ணெய் முதலியவைகளை யுக்ரேய்ன் பிரதேசமே கொடுத்து வருகிறது. மேலும், சுமார் $3\frac{1}{2}$ கோடி யுக்ரேய்ன் வாசிகள் ரஷிய ஆதிக்கத்திலிருக்கின்றனர். ரஷியாவில் செலவாகும் முக்கால்பங்கு இரும்பு, யுக்ரேய்ன் சுரங்கங்களிலிருந்தே வருகிறது. ரஷியாவில் செலவாகும் சாக்கரையில் 100க்கு 90 வீதம் யுக்ரெய்ன் பிரதேசத்திலேயே உற்பத்தியாகிறது. இதர தானிய வகை

சேம்பர்லேனுடன் ஹிட்லருக்குத் தாளம் போட்டு வரும் பிரஞ்சு முதன் மந்திரி டலாடியர்.

(அடுத்த பக்கம் பார்க்க)

அடுத்த ஆபத்து?

(முன் பக்கத் தொடர்ச்சி)

களும் பேர்பாதி யுக்ரெய்னிலிருந்து ரஷியாவுக்குச் செல்லுகின்றன. ரஷியாவின் களஞ்சியம் யுக்ரெய்ன் என்று சொல்லலாம். இப்பேர்ப்பட்ட களஞ்சியத்தை இழக்க ரஷியா ஒருபோதும் சம்மதிக்காது. யுக்ரெய்னில் பருத்தி கிடையாது 1932-ம் வருடந்தான் அங்கு பருத்திச் செடிகளைப் பயிராக்கினர். இப்பொழுது ரஷியாவுக்குச் சப்ளையாகும் பஞ்சு யுக்ரெய்னிலிருந்தே போகிறது. சுமார் 50000 ஏக்கர் நிலத்தில் பருத்தி சாகுபடியாகிறது இவ்வளவு அபிவிருத்திக்கும் சோவியத் சர்க்காரே காரணம். ஆகவே, ஹிட்லர் ரஷியாவின் களஞ்சியத்தில் மண்ணைப் போட விரும்புவதில் ஆச்சரியமில்லை. அதுமட்டுமல்ல; ரஷியாவின் களஞ்சியம் ஜெர்மன் களஞ்சியமாகிவிட்டால் ஜெர்மனிக்கு எவ்வளவோ நன்மையாக விருக்கும். யுக்ரெய்னையும் ஹிட்லர் கைப்பற்றிவிட்டால் அப்புறம் ஐரோப்பாவை ஆட்டிவைப்பதில் ஹிட்லருக்குச் சங்கடமே இருக்காது.

ளுடன், யுக்ரேய்ன் தேசிய ராணுவ சோல்ஜர்கள் 2 லக்ஷம் பேரும் சேர்ந்துகொள்ளப் போகிறார்களாம். ரஷியாவின் ஆதீனத்திலிருக்கும் $3\frac{1}{2}$ கோடி யுக்ரேயன் வாசிகளை ரஷியா அனுமதிக்காவிடில், அல்லது, போலந்து எல்லைப்புறத்திலிருக்கும் சுமார் 70 லக்ஷம் யுக்ரேய்னியரைப் போலந்து சர்க்கார் அனுமதிக்காவிடில், யுக்ரேய்ன் ராணுவங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து ரஷியாவையும், போலந்தையும் எதிர்த்து யுத்தம் ஆரம்பிக்கப் போகின்றனவாம். இந்த யுத்தத்தை



ரஷியா உருப்படாத தேசம்; அங்கு ஏழைகள் கஷ்டப்படுகிறார்கள். அங்கு ராணுவ பலமும் சூன்யமென ஐரோப்பிய வல்லரசுகள் பிரசாரஞ் செய்து வருகின்றனர். ஆனால், இன்று ஐரோப்பியர் ராணுவ பலம் மிகுந்திருப்பது ரஷியா. அந்த ராணுவ பலத்துக்குக் காரணமாயிருந்தவர் ஸ்டாலினும் படத்தின் மேலே காட்டியிருக்கும் ரஷிய ராணுவ மந்திரியுமே யாவர்.

ரஷியா, ஜெர்மனிமீது படையெடுத்து வராமல் தடுப்பதோடு, ரஷியாவின் களஞ்சியத்தையும் அபகரித்துக் கொள்ள ஹிட்லர் விரும்புவதின் அந்தரங்கம் இதுதான். ஆகவே ஹிட்லர் யுக்ரெய்ன் கிளர்ச்சியை ஆதரித்தே தீருவார். அங்கு புரட்சியை உண்டுபண்ண அவர் அந்தரங்கத்தில் வேலை செய்தே தீருவார்.

யுக்ரேய்ன் புரட்சி

ஹிட்லரால் தூண்டப்பட்ட யுக்ரேய்ன் ஜெனரல்களும், ராஜதந்திரிகளும் அந்த புரட்சியை உண்டு பண்ணித் தீவிரமாக வேலைசெய்து வருகிறார்கள். அடுத்த ஜூன் மாதத்துக்குள் யுக்ரேய்னிலிருக்கும் 43 லக்ஷம் பேரடங்கிய ராணுவ சோல்ஜர்கள் சுதந்திரக் கிளர்ச்சியை ஆரம்பிக்கப் போவதாக யுக்ரெய்ன் ராணுவ ஜெனரல், இளவரசர் ரஜூமொவ்ஸ்கி கூறுகிறார். அவர்களை ஆதரிக்க ஹிட்லர் தயாராக இருக்கிறார். யுக்ரேய்ன் ராணுவங்களுக்கு உதவிச் செய்வதாக அவர் வாக்குறுதி கொடுத்திருக்கிறாராம். யுக்ரேய்ன் வாசிகளுக்குச் சுதந்திரம் கொடுப்பதாக ரஷியாவும், போலந்தும் ஆதியில் உறுதி கூறியிருந்தும் அவை சுதந்திரம் கொடுக்கவில்லையாம். ஆனால், ஜெர்மனி அவர்களுக்குச் சுதந்திரம் கொடுக்கவும் உதவிச் செய்யவும் தயாராக இருக்கின்றனவாம். ஆகவே, யுக்ரேய்ன் வாசிகள் ஜெர்மனியை ஆதரிக்கின்றனர். அடுத்த ஜூன் மாதத்துக்குள் சுதந்திரப் புரட்சியை ஆரம்பிக்கப் போகிறார்களாம்! அப்படி சுதந்திரப்புரட்சியை ஆரம்பித்தால் முடிவு என்னவாகும்? அது அடுத்த யுத்தத்தில் வந்து முடியுமா? பொறுத்துப் பார்ப்போம்.

75 வருஷங்களாக இந்த A மார்க்

பெருங்காயம்

ஒன்றே மிகவும் உயர்ந்தது என எங்கும் புகழுடன் லட்சக்கணக்கான இந்திய குடும்பங்கள் தினம் உபயோகிப்பது. போலி மட்டக் காயங்கள் பாஜாரில் மலிந்து கிடப்பதை வாங்கி ஏமாறாமல் A மார்க் பெருங்காயம்தான் வேண்டும் என்று எப்பொழுதும் கண்டிப்பாய்க் கேளுங்கள்.

A மார்க்கை வாங்கினால் ஏமாற்ற முடியாது

1 பவுண்டு ½ பவுண்டு ¼ பவுண்டு. பாக்கிங்குகளிலும் 1 சேர் அழகான டின்களிலும் எல்லா வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

வல்லபதாஸ் தேஜ்பால்

கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்.

தயாராகிவிட்டது

* தமிழ் நாட்டிலே *

புகழ் பெற்ற நடிகர்கள் — பிரபலமான கதை

டி. பி. ராஜலக்ஷ்மி
வி. ஏ. செல்லப்பா

உள்ளங்களைத்
துள்ளிக் குதிக்கவைக்கும்
நாட்டுப் பாட்டுகள்
ஒரு ஸ்பெஷல்

மதுரைவீரன்

புது வருட ஆரம்பத்தில்
மதுரை, காரைக்குடி,
திருநெல்வேலி, தூத்துக்குடி,
கும்பகோணம், திருவனந்தபுரம்,
திண்டிவனம், வேலூர், காஞ்சீபுரம்,
கோயம்பத்தூர், திருச்சினாப்பள்ளி
ஆகிய இடங்களுக்கு வருகிறார்.

மகாண உரிமைகளுக்கும், மற்ற விவரங்களுக்கும்:—

ராஜா பிலிம்ஸ் லிமிடெட்,

142, பூந்தமல்லி ஹைரோட், கீழ்பாக்கம் சென்னை.

சங்கநாதம்

காலிகள் சண்டப் பிரசண்டம்

ராஜாக்கள் பணம் போடும் போடு!

பழைய கருப்பனே!

குலாம்காதரும் கோகுலாஷ்டமியும்

ஆராய்ச்சியா, மூளைக் கோளாறா?

(பூம்-பூம்)

தட்டிக் கேட்க ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப் பிரசண்டன்தான்! சுயமரியாதைக் காலிகளின் கோலம், இந்த நிலைமையில்தானிருக்கிறது. சென்னையில் ஆரம்பித்த காலித்தனம் சென்னையில் இன்னமும் நடந்து கொண்டுதானிருக்கிறது. சென்னையில் மட்டுமல்ல; தூத்துக்குடி, கோவை, விருதுநகர் முதலிய இடங்களிலும் காலித்தனத்தின் அறிகுறிகள் காணப்படுகின்றன. தூத்துக்குடியில் நடந்திருக்கும் மோசமான காலித்தனத்தை எந்தத் தமிழனும் சகித்துக் கொண்டிருக்க முடியாது. கிறிஸ்மஸ் தினத்தன்று நடந்த காங்கிரஸ் ஊர்வலத்தின்மீது, சுமார் 300 சுயமரியாதைக் காலிகள் கொம்பு, கத்தி, தடிகளுடன் காங்கிரஸ்காரர் மீது பாய்ந்து அடித்திருக்கிறார்கள். காலித்தனம் செய்ய வேண்டாமெனக் கும்பிட்டுக் கெஞ்சிய தூத்துக்குடி பிரமுகர்களில் ஒருவராகிய துரைசாமி நாடாருக்குக்கூட கடுமையான காயங்கள். அவர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார். இன்னும் பலருக்குக் காயம். இந்தக் காலித்தனத்தைத் தமிழர் பொறுத்துக்கொண்டுதானா இருக்கிறார்கள்? தேசியத்துக்கும், தமிழர் விழிப்புக்கும் உறைவிடமாயிருந்த தூத்துக்குடியில் இந்தக் காலித்தனம் நடந்திருக்கிறது. இதை நினைக்கும்போது எவர் இரத்தந்தான் கொதிக்காது? இது தூத்துக்குடி மக்களுக்கே மானக்கேடு என்பதில் சந்தேகமில்லை. தூத்துக்குடி தமிழ் மக்கள் உள்ளத்தில் வீர இரத்தம் அல்ல; கேவலம், தண்ணீர் ஓடுகிறதென்றே நினைக்கிறேன் இன்றேல், கேவலம் சுமார் 300 காலிகளை இந்த அட்டூழியஞ் செய்ய அவர்கள் ஒருபோதும் அனுமதித்திருக்கமாட்டார்கள். தூத்துக்குடிக்கு நேர்ந்த அபவாதத்தைப் போக்க தூத்துக்குடி தமிழ் மக்கள் முன் வருவார்களாக. தூத்துக்குடி இளைஞர்கள் இனிமேலாவது விழிப்பாயிருக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

* * *

சென்னையில் நடந்த காலித்தனத்துக்குப் பின், அதாவது, பத்திரிகை காரியாலயங்களின்மீது காலிகளின் கல்லெறி அபிஷேகம் நடந்த பின், தூங்கிக்கொண்டிருந்த சென்னைப் போலீசார் சற்று விழிப்படைந்தார்கள். ஜரூராகப் பந்தோபஸ்துகளும் நடந்தன. ஆனால், போலீசார் மீண்டும் தூங்க ஆரம்பித்து விட்டார்கள் போலும்! ஆதியப்ப நாயக்கன் தெருவிலுள்ள ஒரு கட்டிடத்தின்மீது தேசியக் கொடி பறந்து கொண்டிருந்தது. தேசியக்கொடியைக் காண்பதே மன மகிழ்ச்சி; தேசியம் குடி கொண்டிருக்கும் தேசிய வீரர்களுக்கு ஆனந்தம். ஆனால், தேசத் துரோகிகளுக்கு அது விஷமம். தேசியக் கொடியைக் கண்ணாரக் காணுவது கூட அவர்களுக்குப் பிடிப்பதில்லை சிவப்புத் துணியைக் கண்ட மாடுகள் மிரண்டு ஓடுவது போல், சில தேசியக் கொடியைக் கண்டு மிரண்டு ஓடுகிறார்கள். இந்தக் கோஷ்டியில் சுயமரியாதைக்காரரையும், ஜஸ்டிஸ் கட்சியாரையும் சேர்த்துக் கொள்ளலாம் ஆதியப்பன் தெரு வழியே சென்ற ஒருசுயமரியாதைக்கூட்டத்தாருக்கு, அங்கு கம்பீரமாகப் பறந்து கொண்டிருந்த தேசியக் கொடி கண்களில் பட்டதும், கண் உறுத்தியது. தேசியக் கொடியை இறக்கும்படி கல் அபிஷேகம் செய்ய ஆரம்பித்தார்கள் அட்டூழியத்தில இறங்கினர். வீட்டினுள் புகுந்து கொடியை இறக்கவும் துணிந்தனர் போலீஸ் புலிகள் யாவரையும் அங்கு காணவில்லை. பெத்து நாயக்கன் பேட்டையில் பல ஆயிரக்கணக்கான மக்கள் அமைதியாகச் சென்ற காங்கிரஸ் ஊர்வலத்தின் மீது கற்களை வீசினார்கள். மறைவிலிருந்துகொண்டு பலவித அட்டகாசஞ் செய்தனர் மூலகொத்தளத்தில் நடந்த தொழிலாளர் கூட்டத்திலும் தேசியக் கொடியைக் கண்டு சுயமரியாதைக்காரர் வெருண்டு, கற்களை வாரி வீசினர். ஒரு தோழரை தூக்கிக்கொண்டுபோய் அடித்துக் காயப்படுத்தினர், சோடா புட்டியை எடுத்து வீசியதால் இன்னொருவருக்குக் காயம். சுமார் 50 பேர்களுக்கு மேல் அடிபட்டனர். போலீசாருக்கு டெலிபோன் செய்தும், ஒரு போலீஸ் வீரர்கூட அங்கு தலைகாட்டவில்லை இதிலிருந்து என்ன நினைப்பது? போலீசார் மீண்டும் தூங்க ஆரம்பித்துவிட்டார்களென்று நினைப்பதா, அல்லது, அவர்களும் மறைமுகமாகவிருந்து அவர்களுக்குத் துணைச் செய்து வருகிறார்களென்று நினைப்பதா? சென்னையில் நடந்து வரும் அக்கிரமங்களைக் கவனித்தால் போலீசார் மறைமுகமாய்க் காலிகளுக்குத் துணைபோகிறார்களென்றே கருதவேண்டியிருக்கிறது. இவ்வித புகார்கள் பல வந்துகொண்டிருக்கின்றன. மஞ்சள் பெட்டியின் மகத்துவத்தைக் காட்டப் போலீசார், இந்தச் சண்டித்தனஞ் செய்கிறார்களென்று பொது ஜனங்கள் சந்தேகிக்க நேரிடுகிறது.

* * *

இந்தக் காலிகளின் கொட்டத்தை அடக்க காங்கிரஸ் சர்க்கார் முன்வரக் காணோம். எத்தனையோமுறை இடித்து எழுதியும், போலீஸ் மந்திரியும், பிரதம மந்திரியுமான ஆச்சாரியார் அசைகிறாரில்லை பழைய பல்லவியே பாடிக்கொண்டிருக்கிறார். அவர் சம்பந்தப்பட்டமட்டில், அவர் என்ன பல்லவியோ பாடித்தொலைபட்டும். அவருக்குப் பலத்த போலீஸ் பந்தோபஸ்து இருக்கிறது தனிவிடம், போக வர சொகுசான காரும் இருக்கிறது. சாதாரண மக்கள் கதியென்ன? அவர்கள் காலாடிகளிடம் அடிபட்டு மடிவதா? ஆச்சாரியார் இதைக் கவனித்து இந்த அட்டூழியங்களைத் தடுக்க உடனே தகுந்த ஏற்பாடுகள் செய்வாராக. இன்றேல், காலாடிகள் கொட்டம் அத்துமீறிப் போய்விடும். அதனால், இனிமேல் கலகங்களும், சண்டை சச்சரவுகளும் பலிந்து, பல மாசற்ற மக்களின் இரத்தஞ்சிந்த வேண்டியிருக்குமென எச்சரிக்கைசெய்ய விரும்புகிறேன் ஒருவேளை மக்கள் உயிர்களுக்குக்கூட ஆபத்து வந்தாலும் வரலாம். ஆச்சாரியார் மந்திரி பதவியே பிரதானமென எண்ணுவாரேயானால், அவர் அந்தப் பதவியைக் கட்டியழட்டும். ஆனால், காங்கிரஸ் மந்திரிகள் ஏழைகளின் பங்காளா, ஏழைகளின் நன்மைக்காகவே காங்கிரஸ்காரர் மந்திரி பதவி வகித்து வருகிறார்களென்று சொல்லுவது அது சுத்தப் பொய் யென்றுதான் சொல்லவேண்டியிருக்கும்.

* * *

ஒரு சிறு தமிழர், அதிலும், ஜஸ்டிஸ், சுயமரியாதைத் தமிழர் கூடிக்கொண்டு, அவர்களே தமிழர், தமிழ்நாடு அவர்களுக்கே யென்று ஆர்ப்பாட்டஞ் செய்து வருவது வேடிக்கையாக இருக்கிறது! அந்தத் தமிழர், சுத்த இரத்தம் ஓடும் அந்தத் தமிழ் மகான்களின் கருணையால் தான் இவ்வளவு அட்டூழியங்கள் நடக்கின்றன தமிழ் நாடு தமிழருக்கே யென்று சொல்லிக்கொண்டு தமிழர் மண்டையையே உடைக்கிறார்கள். இது விசித்திரமல்லவா? இதிலும் இன்னொரு விசித்திரம் தமிழர் மண்டையை உடைக்கவும், தமிழர் வீடுகள் மீது கல்லெறியவும், மண்ணை வாரி வீசவும், தமிழரிடமே பணப் பிச்சை கேட்கிறார்கள்! தமிழர் ஏராளமாகப் பணம் கொடுத்து உதவ வேண்டுமாம்! எதற்கு? இதுவரையில் உடைந்த மண்டைகளும், கண்ணாடிக் கதவுகளும் போதாதென்று, இன்னமும் அதிகமாக உடைக்கப் பணம் கேட்கிறார்கள்? இவர்களுக்குச் சில தமிழர் பணம் கொடுத்துதவுவது வேடிக்கையிலும் பெரிய வேடிக்கை தான்! தமிழ் நாடு, தமிழருக்கே, தமிழ் வாழ்க, என்பதெல்லாம் வெறும் "ஹம்பக்" என ஏற்கனவே பன்முறை எழுதியிருக்கிறேன். அதைத் திரும்பத் திரும்ப இங்கு எழுதிக்கொண்டிருக்க நான் விரும்பவில்லை. இந்தத் தமிழர் இயக்கமென்பதெல்லாம் வெறும் ஆர்ப்பாட்டம். காங்கிரஸை எதிர்க்கவும், ஜஸ்டிஸ் கட்சிக்கு உயிர் கொடுக்கவும், ராஜாக்கள், ஜமீன்தார்கள் பின்னாலிருந்து தூண்டிவிடும் இயக்கமே இது. அவர்கள் பணமே இந்தப் போடு போடுகிறது இதைத் தவிர தமிழ்நாடு, தமிழ் என்று கூறுவதெல்லாம் வெறும் வெளிவேஷம். இவர்களுக்குத் தமிழ்நாட்டிலும் பற்றுக் கிடையாது; தமிழ் மொழியிலும் பற்றுக் கிடையாது சுயநல நோக்கத்துடன் இந்த வித்தையெல்லாம் காட்டி வருகிறார்கள். இவர்கள் மாய வித்தையில் சில தமிழர் ஏமாற்றமடைந்தனர். ஆனால், தமிழ் மக்கள் எல்லோரும் ஏமாறவில்லை. அந்த வகையில் தமிழர் செய்தது பெரிய புண்ணியந்தான்! இந்தப் போலி தமிழ் இயக்கத்துக்குப் பணம் கொடுத்துச் சனியனை விலைக்கு வாங்கிக்கொள்ளாமல் விட்டது இன்னமும் பெரிய புண்ணியம். இந்தத் தமிழ் வீரர்களுக்கு, ராஜாக்கள், ஜமீன்தார்கள் பணக்காரர் பணம் வந்து குவிகிறது. பேர் புள்ளி இல்லாமல் நூறுக்கணக்காகக் கொடுப்பவர் பலரிருக்கிறார்கள். அந்தப் பண விவரம் பகிரங்கமாக வரவே வராது. தமிழர் கண்ணைத் துடைக்கவே, அவர்கள் பகிரங்கமாகப் பணப் பிச்சை கேட்கிறார்கள். உண்மையில் அவர்களுக்குப் பணப் பஞ்சமே கிடையாது. ராஜா, ஜமீன்தார்கள் பணம் இப்பொழுது தண்ணீர்பட்டபாடுதான்! அதற்குச் சந்தேகமே வேண்டாம்.

* * *

உதாரணம் வேண்டுமா? வேலூர், சென்னை மகாநாடுகளைப் பாருங்கள். முதன் முதலில் சென்னையை எடுத்துக்கொள்ளுவோம். சென்னை ஜஸ்டிஸ் கட்சி மகாநாடு ஒரு அதிசயம்! சென்ற வாரம் எழுதியது போல் இது கலிகால அதிசயங்களில் ஒன்று! இதை சென்னை "மெட்ராஸ் மெயில்" பத்திரிகை கூட ஒப்புக்கொண்டிருக்கிறது. இது வரையில் ஜஸ்டிஸ் கட்சி மகாநாடு நடக்கிற இடங்கூடத் தெரியாது. பகிரங்கமாக ஒரு பந்தலில் அந்த மகாநாடு கூடியதும் கிடையாது. அடியோடு ஒழிந்து, இருக்கிற இடங்கூடத் தெரியாத இந்த நிலை

(அடுத்த பக்கம் பார்க்க)

ச ங் க நா த ம்

(முன்பக்கத் தொடர்ச்சி)

மையில், வெகு தடபுடலாக மகாநாடு நடப்பதென்றால் அது அதிசயமல்லவா? ஹிந்தி எதிர்ப்புச் செத்து, தமிழர் இயக்கமாக மாறிய தின் மர்மத்தை இப்பொழுதாவது தமிழர் உணர்ந்திருப்பார்கள். தமிழ் எக்கேடு கெட்டாலும், தமிழ்நாடு குட்டிச்சுவரானாலும் அதைப்பற்றி ஜஸ்டிஸ் கட்சியாருக்கோ, அல்லது அதைத் தாங்கி நிற்கும் சுயமரியாதைக்காரருக்கோ கடுகளவு கவலை கிடையாது உயிர் துறந்து, தேடுவாரற்று, நீண்டுவாரின்றிக் கிடந்த அவர்கள் இயக்கத்துக்குப் புத்துயிர் அளிக்கவும், காங்கிரசை எதிர்க்கவுமே இந்த அட்டகாசத்தில் இறங்கினார்கள். வகுப்புத் துவேஷத்தை மூட்டினார்கள்; பார்ப்பனீயப் பூச்சாண்டி காட்டினார்கள் இப்பொழுது அதெல்லாம் உருவெடுத்து ஜஸ்டிஸ் மகாநாடாக வந்திருக்கிறது. மகா நாட்டுத் தலைவர் ஈ வெ ராமசாமி நாயக்கர் சிறையிலிருக்கிறார் அவருக்குப் பதிலாக அவருடைய படத்தைத் தலைவர் பதவியில் வைத்து, அவர் தலைமைப் பிரசங்கத்தை வெறும் தலைவர் பன்னீர்செல்வம் படித்தார். மகா நாட்டுக்கு அவர்கள் எதிர்பார்த்தபடி 50 ஆயிரம், 60 ஆயிரம் பேர் வரவில்லை. சுமார் 5000, 6000 பேர்களே வந்திருந்தார்கள் வந்தவர்களும், ஜஸ்டிஸ் கட்சிப் பற்று மேலோங்கிவரவில்லை வேடிக்கை பார்க்கவும், காங்கிரஸ், பார்ப்பனர்மீது வசைபாடும் ரீங்காரத்தைக்கேட்டு ஆனந்திக்கவுமே வந்திருந்தார்களென்று நிச்சயமாக சொல்லலாம். மாகாநாட்டுக்குக் கொடியேற்றி வைத்தசெட்டிநாடு குமாரராஜா, காங்கிரஸ் சர்க்கார்மீது ஒரு ஒப்பாரி வைத்தார். அதன்பின் தலைவர் ராமசாமி நாயக்கர் பிரசங்கம் படிக்கப்பட்டது. ராமசாமியார் பிரசங்கத்தைக் கேட்க வேண்டுமா? பழைய கருப்பனே கருப்பன்? ஆதிமுதல் அந்தம்வரையில் பார்ப்பனத் துவேஷ ; காங்கிரஸ்மீது ஒரு பெரிய வசைபுராணம் ஜஸ்டிஸ் கட்சி பதவி வேட்டையாடும் கட்சியல்லவாம்; அந்தக் கட்சி பெரிய தியாகங்கள் செய்திருக்கிறதாம்! பூர்ண சுயராஜ்யம் வேண்டாமென்று சொல்லவில்லையாம், வெள்ளையரை இந்தியாவிலிருந்து வெருட்ட அவர்களும் தயார்தானும்! காங்கிரஸ்காரர் செய்யும் எந்தக் காரியத்தையும் ஜஸ்டிஸ், சுயமரியாதைக்காரர் வேண்டாமென்று சொல்லவில்லையென ராமசாமியார் கூறகிறார். அட ராமா! ஜஸ்டிஸ் கட்சியார் இவ்வளவு பெரிய அதி தீவிரவாதிகள் என்பது எனக்கு ஆதியிலேயே தெரியாமற்போயிற்று! சுயராஜ்யமே வேண்டாம்; வெள்ளையர் சாஸ்வதமாக இந்தியாவிலேயே இருக்கவேண்டும்; அவர்களுக்கே தூபம்போட்டு, அவர்கள் காலடிகளில் விழுந்து நமஸ்கரிப்பதே பெரிய புண்ணியமென்றும், அதுவே சுவர்க்கலோக மென்றும் ஜஸ்டிஸ் கட்சியார் அடிக்கடி கூறிவருகிறார்கள். இன்றைக்கும் சு. ம காரர் பகிரங்கமாகக் கூறிவருகிறார்கள். ராமசாமியார் அப்படி இல்லையென்கிறார். யாரை நம்புவது? அதுதான் போகட்டும்; காங்கிரஸ்காரர் செய்த எந்த நன்மையானகாரியத்தை ஜஸ்டிஸ் சட சியார் ஆதரிக்கவில்லையென்று கேட்டாரல்லவா? காங்கிரஸ் சர்க்கார் மதுவிலக்குச் சட்டம் கொண்டு வந்தார்கள் அது முட்டாள்த் தனம் நிர்வாகம் தெரியாதவர்கள் செய்கிற வேலை யென்று கண்டித்தார்கள். விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம் கூடாது. அது ஏழைகள் வாயில் மண்ணை போடுவது. இவ்வாறு காங்கிரஸ் சர்க்கார் செய்யும் சட்டங்களில் அவர்கள் எதிர்க்காத சட்டம் ஏதேனும் உண்டா? ஒன்றுமில்லை. ஆனல், ஒன்று; ஹிந்தியைப் போல, பிறசட்டங்களை எதிர்க்க அவர்களுக்குத் தைரியமுமில்லை. அவகாசமும் இல்லை இதர சட்டங்களைப் பகிரங்கமாக எதிர்த்துக் கிளர்ச்சி செய்தார்களோ அவர்கள் இருக்கிற இடம் தெரியாமல் போயிருக்கும். அவர்களுக்கு அகப்பட்டது ஹிந்தி. அதை பிடித்துக்கொண்டு பேயாட்டம் ஆடி, அவர்கள் கும்பலுக்கு ஆள்தேடிக் கொண்டு வருகிறார்கள் அந்த கும்பலுடன் சேர்ந்து கோவிந்தா போடத் தருணம் பார்த்துக் கொண்டிருந்த அநாமதேயப் பேர்வழிகள் சேர்ந்து கொண்டனர். அந்தக் கும்பலே ஜஸ்டிஸ் கட்சியில் இப்போது நிறைக்திருக்கிறது. ஆனல், இந்தக் கும்பல் எத்தனை நாளைக்கு நீடித்திருக்கப் போகிறது? ஜஸ்டிஸ் கட்சி மகாநாட்டுடன் எல்லாம் தீர்ந்துவிடும். அப்புறம் பழைய குருடிதான்! வேண்டுமானல் தமிழர் பொறுத்துப் பார்க்கட்டும்.

* * *

இந்த ஜஸ்டிஸ் கட்சியில் எங்கிருந்தோ பாத்ரோ குதித்து விட்டார். ஆனல், பொப்லி ராஜாவைக் காணும். அதுதான் பெரிய அற்புதம். ராமசாமியார், பொப்லிக்கு புகழ்மாலை சூட்டியிருக்கிறார் பொப்லி போன்ற ஜஸ்டிஸ் பெரியார் பெரிய தியாகஞ் செய்திருக்கிறார்களாம்! பொருள் நஷ்டமடைந்திருக்கிறார்களாம்! இருக்கலாம்; அந்தப் பொருள் நஷ்டமும், தியாகமும் யாருக்கு? தேசத்துக்கா, தேசமக்களுக்கா? தமிழ்நாட்டுக்கா, தமிழ் மக்களுக்கா? ஒருவருக்கும் இல்லை ஜஸ்டிஸ் கட்சிக்கும், அந்தக் கட்சி மூலம் பட்டம் பதவிபெறுவதற்காகத்தான்; ஜஸ்டிஸ் கட்சியால் லாமடைந்தவர்கள் அவர்களே. வேறு யாருமல்ல இதைஒருதியாகமென்று யாராவது வாய் கூசாமல் சொல்லுவார்களா? இது தியாகமாகுமாவென்று தமிழரே முடிவு செய்து கொள்ளட்டும். பொப்லி பெரிய தியாகஞ் செய்திருப்பாரேயானல், பித்தாபுரம் ராஜாகூடப் பெரிய தியாகஞ் செய்திருக்கிறாரென்று தான் சொல்லவேண்டும். சென்ற தேர்தலின்போது, பித்தாபுரம் ராஜா லக்ஷக் கணக்கில் கொட்டினாரே! ஏராளமானவர்கள் அவரை அண்டி, தின்று, கொழுத்தார்களே? அப்படித் தின்றவர்களே இன்று ஜஸ்டிஸ் கட்சியில் கும்மாளம் போடுகிறார்கள். தேர்தலைச் சாட்டி, பலர் தின்று கொழுக்கக் காரணமாயிருந்த பித்தாபுரம் ராஜா பெரும் தியாகஞ் செய்தவரல்லவா? அவர் செய்தது பெரிய தியாகமென்றால், பொப்லி ராஜா முதல் பல ஜஸ்டிஸ் தலைவர்கள் செய்திருக்கும் தியாகம் மகத்தான தியாகந்தான்!

* * *

ராமசாமியாரின் தலைமைப் பிரசங்கம் உருப்படியானதல்ல. துவேஷ மூட்டுவதாக இருக்கிறதேயொழிய, ஒரு நன்மையான திட்டம் எதையும் காணும். தமிழ் நாடு தமிழருக்கே என்று கூறுகிறார். யார் இல்லை யென்று சொன்னது? அவர் கூறுவது குற்றமென்று யாரும் சொல்லவில்லை ராமசாமியார் தமிழ் நாடு தமிழருக்கே என்று கூற நேற்று நினைத்தார். காங்கிரஸ்காரர் அதை ஏற்கனவே கூறிவிட்டார்கள். கூறியது மட்டுமல்ல; பாஷாவாரியாக மாகாணங்களையும் பிரித்து விட்டனர். கடைசியாக ராமசாமியார், மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் ஒரு முடிச்சுப் போட்டிருக்கிறார் பணக்கார ஜஸ்டிஸ் கட்சி இயக்கமும், தொழிலாளர் இயக்கமும் ஒன்றுதானும்! இதைத் தொழிலாளர் யாராவது ஒப்புக் கொள்ளுவார்களா? மூலக் கொத்தளத்தில் நடைபெற்ற சம்பவம் இதற்கு நல்ல உதாரணமாகுமே! தொழிலாளர் கண்ணில் மண்ணைப்போட்ட மாதிரி, ராமசாமியார் இப்படிக் கூறத் துணிந்தது ஆச்சரியந்தான். கோவிலஷ்டமிக்கும், குலாம் காதருக்கும் என்ன சம்பந்தமுண்டோ, அந்த சம்பந்தமே ஜஸ்டிஸ் கட்சிக்கும் தொழிலாளர் இயக்கத்துக்கும் உண்டு என்பது எனது கருத்து ராமசாமியாரின் சிறந்த தலைமையுரைக்கு இதைவிட வேறு அத்தாட்சி வேண்டாம். இதிலிருந்தே அவர் பிரசங்கத்தின் உதவாக்கரைத் தனத்தை அறிந்து கொள்ளலாம்.

* * *

சென்னை ஜஸ்டிஸ் கட்சி மகாநாடு இந்த ஆக்கத்தில் நடைபெற்றது. வேலூரில் நடந்த தாய்மார், அண்ணன்மார் மகா நாடுகளைக் கவனிப்போம். வீரத் தாய்மார், பெண்களுக்காகப் போராடக் கூடிய காரியங்கள் எவ்வளவோ உண்டு பெண்கள் உரிமைகளை முதலில் நிலைநாட்டத் தாய்மாருக்கு எண்ணமில்லை கேவலம், கவைக்குதவாத ஹிந்தியை நினைத்து அவதிப்படுகிறார்கள் வேலூர் தாய்மார் மகாநாட்டுக்குத் தலைமைவகித்த வீரத்தாய், பெண் மக்களையும், ஆண் மக்களையும், தமிழைப் பாதுகாக்க அறைகூவி அழைக்கிறார் பலஆயிரம் வருடங்களாக தனித்திலங்கிய தமிழைப் பாதுகாக்க யாரும் வரவேண்டாம் தமிழ்த் தாய்க்குத் தமிழைப் பாதுகாக்க வழி தெரியும் தமிழ் அழியவே அழியாது அன்புக்கு அழிவேது. அன்பிலே பிறந்து, அன்பிலே வளர்ந்து, அன்பிலே தவழும் தமிழ் அழியவே அழியாதென்று ஆயிரம் முறை கூறுகிறேன் தமிழ் தெய்வீக பாஷை; தமிழ் அழியுமேயானல், தெய்வமும் அழியவேண்டியதுதான் ஆகவே, தமிழைப்பாதுகாக்கத் தாய்மார் கவலைப்படவேண்டாம்; தமிழரும் கவலைப்படவேண்டிய அவசியமில்லை. தமிழ் என்றும் ஓங்கிநிற்கும்; அது தனித்து இலங்கும் உலகிலேயே அது தலைநிமிர்ந்து நிற்கும் ஆற்றல் படைத்தது ஹிந்தியோ, சமஸ்கிருதமோ, சீனப் பாஷையோ, ஜப்பான், ஆங்கில பாஷைகளோ எவையும், தமிழை ஒருபோதும் அழித்து விடாது. ஆனல், தலைவித்தாய் கூறியது போல், கலியாணத்துக்கும், கருமாதிக்கும் உபயோகிக்கும் அந்நிய பாஷைகளை ஒழிக்க தாய்மார் முன்வரட்டும். அதைவேண்டாமென்று யாரும் தடுக்கவில்லை. தமிழ் தாய்மார் ஓய்வு நேரங்களில் தமிழைக் கற்று, அவர்கள் தமிழை விருத்தி செய்து கொள்ளட்டும். பிள்ளைகளுக்கும் கற்றுக்கொடுத்து தமிழை அபிவிருத்தி செய்வது நல்லது தமிழ் பழக்க வழக்கங்களையே அனுஷ்டிக்கட்டும். தமிழ் நாட்டுத் துணிமணிகளையே உபயோகிப்பது நல்லது. அதுதான் புத்தி. சுதேசிகய ஆசிரியுங்கள். அது பல ஏழைகளுக்குச் சாப்பாடு போடும்.

(அடுத்த பக்கம் பார்க்க)

டிராலியின்

கமகமவென

பரிமளிக்கும்

கஸ்தூரி

சோப்

எல்லா இடங்களிலும் கிடைக்கும்.

A. V. R. A. அடைக்கப்ப செட்டியார்

52 பந்தர் தெரு, மதருஸ்.

பிராஞ்சு—மதுரை.

சங்கநாதம்

(முன் பக்கத் தொடர்ச்சி)

கதர், கைத்தறித்துணிகளைக் கட்டுங்கள். பல ஏழைத் தாய்மாரின் மானம் பாதுகாக்கப்படும். ஜாதி பேதம் காட்டும் ஹோட்டல்களைப் பகிஷ்கரியுங்கள். ரொம்ப நல்லது தமிழை, தமிழன் ஒவ்வொருவனும் உயிராகக்கருதி இருக்கட்டும். தாய்ன், இந்த வீரமொழிகளை அடிபடியே ஏற்றுக்கொள்ளுகிறேன் தமிழரும், தமிழ் தாய்மாரும் இந்த வீர மொழிகளை கவனிக்கும்படி கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஆனால், கேவலம், ஒரு சாதாரண ஹிந்தியைக் கண்டு மிரண்டு, வீரத்தை இழந்து, கோழைத் தனமடைய வேண்டாம். அது வீரத் தாய்மாருக்கு அழகல்ல. வேலூரில் கூடிய அண்ணன்மார் மகாநாட்டிலும் இந்த ஹிந்தியைக் கண்டே தொடை நடுக்கம் கொண்டிருக்கிறார்கள். அந்த மகாநாட்டுக்குத் தலைமை வகித்த சர். பன்னீர் செல்வம் பார்ப்பனா தமிழா அல்ல; அந்நியர்.

இந்தியா தமிழர் நாடு அல்ல என்ற சில விசித்திரங்களைக் கண்டு பிடித்திருக்கிறார். அவருக்கு ஆராய்ச்சி மூளை மிக மிகச் சூன்யமென்பது அவர் பேச்சிலிருந்தே தெரிகிறது. அப்படியானால், தமிழர் யார்? தமிழர் திராவிடர் என்றால், அந்தப் பெயர்கூட ஆரியர் நமக்குக் கொடுத்த பெயர்தானே? தமிழர் பெயர்கள் என்ன? இந்தியா நமது தேசமில்லையென்றால், நமது தேசமெது? பெயரென்ன? அதைப் பற்றிப் பன்னீர் செல்வனார் ஒன்றும் கூறவில்லை. அவர் ஆராய்ச்சி மூளைக்கு அது எட்டவில்லை போலும்! இவ்வாறு குதர்க்கம் பேசும் சர். பன்னீர் செல்வம், நிதான புத்தியுடன்தான் இவ்வாறு பேசியிருக்கிறாரா, அல்லது, அவர் மூளையில் ஏதேனும் கோளாறு ஏற்பட்டிருக்கிறதா! இந்தச் சந்தேகம் எனக்கு வர வர அதிகரித்துக்கொண்டு வருகிறது சர். பன்னீர் செல்வம் தகுந்த ஒரு டாக்டரைக் கொண்டு சிகிச்சை செய்துகொள்ளுவது நல்லது. இன்றேல், அவர் மூளை போகும் வேகத்தில் அவருக்கு ஏதேனும் ஆபத்து வந்துவிடுமோ வென்று அஞ்சுகிறேன். அவர் மட்டுமல்ல; அவர் கோஷ்டியார் அனைவருமே தகுந்த ஒரு டாக்டரின் ஆலோசனையைக் கேட்பது நல்லது. இவர்கள் ஆராய்ச்சியும், பேச்சும் விபரீதமாக இருக்கிறது. தமிழர் இவர்கள் பேச்சைக் கேட்டால் அவர்கள் மூளையும் அசடாவது நிச்சயம். அப்புறம் தமிழ்நாடே ஒரு பைத்தியக்கார ஆஸ்பத்திரியாக விளங்க வேண்டியதுதான்!

சினிமா படங்கள்!

$4\frac{1}{4}$"x$3\frac{1}{4}$" சினிமா தனிப்படங்கள் டஜன் 1க்கு ரூ 1-0-0

" தேசிய தலைவர்கள் படம் டஜன் 1-க்கு ரூ 1-0-0

" லீலா விநோதப் படங்கள் டஜன் 1-க்கு ரூ 1-0-0

வி. பி. கிடையாது.

முன்பணம் அனுப்பவேண்டும்.

எம். ஜி. ராஜன் & Co,

P. B. No. 231 G. P. O. MADRAS



31-12-38 மகத்தான ஆரம்ப விழா

நடிகர்கள் :

M. M. தண்டபாணிதேசிகர்
M. S. தேவசேனா
P. G. வெங்கடேசன்
P. S. ஞானம்
மாஸ்டர் தேவமூர்த்தி
T. E. கிருஷ்ணமாச்சாரி

முதலியோர் நடித்தது

சென்னை
சினிமா சென்ட்ரல்
திருச்சி வெலிங்டன் டாக்கீஸ்
காரைக்குடி ராமவிலாசம் தியேட்டர்

தாயுமானவர் சிறந்த தமிழ் பேசும் படம்

டைரக்ஷன்: T. R. சுந்தரம் B. A. Bsc (Leeds)

பாடல்கள்: பாபநாசம் சிவன்

கதை, வசனம் உதவி டைரக்ஷன், பி. எஸ். செட்டியார்

விபரங்களுக்கு:—

ஜெயபாரத் பிலிம் கம்பெனி லிமிடெட்.,

தெப்பக்குளம் போஸ்டு, திருச்சினாப்பள்ளி.

தந்தி: 'ஜெயபாரத்'

தமிழ் மணி

சென்னை—வெகுதானிய ஹு மார்கழி மீ 17உ (1 1 1939)

பழங் கணக்கு

1939ம் வருடம் இன்று ஆரம்பமாகிறது. இந்தப் புது வருடம் எல்லோருக்கும் பாக்கியமான வருடமாயிருக்க எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறோம்

சென்ற வருடம்

1938ம் வருடம் முடிந்துவிட்டது என்றாலும், சென்ற வருட நிகழ்ச்சிகளையும், சென்ற வருடத்தில் என்னென்ன மாறுதல்கள் உலகில் ஏற்பட்டன வென்பதையும் அலசிப் பார்க்க வேண்டியது அவசியம். சென்ற வருடம் ஏற்பட்ட லாப நஷ்டமென்ன? பொதுப்படக் கூறின், 1938ம் வருடம் அவ்வளவு அதிர்ஷ்டமான வருடமென்றுகூற முடியாது ஐரோப்பாவில் ஒரே கொந்தளிப்பு. பெரிய தேசங்கள் சிறு தேசங்களை விழுங்கி ஏப்பம் விட்டன. ஜேர்மனியானது, ஆஸ்திரியா, ஜெக்கோஸுடேடன் பிரதேசங்களை கைப்பற்றியது ஐரோப்பிய யுத்தம் ஒன்று இழையில் தொங்கிக்கொண்டிருந்தது. யுத்தத்தை தடுக்க ஐரோப்பிய வல்லரசுகளான பிரிட்டனும், பிரான்சும் ஜெக்கோவை ஜேர்மனிக்கு அர்ப்பணஞ் செய்தன; யுத்தம் வராமல் தடுத்தன. ஆனால், யுத்த பீதி நீங்கிவிட்டதா? இல்லை. ஐரோப்பாவை இன்றளவும் யுத்த மேகம் சூழ்ந்து குமுறிக்கொண்டுதானிருக்கிறது. பிரிட்டன், பிரான்ஸ் ஜேர்மனி, இதாலி, ரஷியா முதலிய தேசங்கள் அரசியல் சதுரங்கம் விளையாடுவதில் கண்ணும் கருத்துமாயிருக்கின்றன. ஒன்றை யொன்று பார்த்து, உர்ரென்று உறுமிக்கொண்டிருக்கின்றன. ஐரோப்பிய சமாதானத்தைச் சீக்கிரத்தில் எதிர்பார்க்க முடியாது. ஒரு யுத்தம் வந்தாலொழிய இந்த நெருக்கடி தீரப்போவதுமில்லை.

இதர தேசங்கள்

ஸ்பெய்ன் யுத்தம் இன்னமும் நடந்து கொண்டுதானிருக்கிறது. ஸ்பெய்ன் சர்க்காரை பிரிட்டனும், பிரான்சும் கைவிட்டன. கலகக்காரரை, இதாலியும், ஜேர்மனியும் ஆதரித்து வருகின்றன. ஜெனரல் பிராங்கோ தீவிரமாக யுத்தத்தை நடத்தி வருகிறார். ஸ்பெய்னில் அவரே வெற்றிபெறுவாரென்று இப்பொழுதே ஜோசியங்கூறலாம். துருக்கி வீரர் கமால் இறந்தார். இது துருக்கிக்கே பெரும் நஷ்டமாகும். ஐரோப்பிய சிறு தேசங்கள் யுத்தத்துக்குப் பயந்து தத்தளித்துக்கொண்டிருக்கின்றன. அமேரிக்கா எதிலும் ஈடுபடாமல் தனிமையாக ஒதுங்கி இருக்கிறது.

சீன-ஜப்பான்

ஜப்பானியர் சீனமீது அக்கிரமமாகப் படையெடுத்துச்சென்று, சீன மக்களைக் கொன்று குவித்து வருகின்றனர். சீனாவில் பல பிரதேசங்களை ஜப்பானியர் கைப்பற்றி இருக்கிறார்கள். அங்கு அவர்கள் செய்யும் அட்டூழியங்கள் கொஞ்சமல்ல ரஷியாவுக்கும், ஜப்பானுக்கும் ஒரு சிறு சண்டை ஏற்பட்டது. ஆனால், அந்தச் சண்டை நீடிக்கவில்லை சமரசமாகத் தீர்ந்தது. என்றாலும், இரு தேசங்களுக்குள்ளும் குரோதம் வளர்ந்துகொண்டுதானிருக்கிறது. இது சீக்கிரத்தில் ஒரு பெரிய போராட்டமாக வந்து முடிந்தாலும் முடியலாம்

இந்தியா

இந்தியாவில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. காங்கிரஸ்காரர் 8 மாகாணங்களில் அதிகாரத்திலிருக்கிறார்கள். இதர மாகாணங்களிலும் காங்கிரஸ் கூட்டுமந்திரி சபை அமைக்க முயற்சி செய்து வருகிறார்கள். பலமாகாணங்களில் மதுவிலக்குச் சட்டம் அமுலுக்கு வந்திருக்கிறது காங்கிரஸ் மந்திரிகள் இதில் ஓரளவு வெற்றி பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது ஏழைகளுக்கு உபகாரமாக இன்னும் பல சட்டங்களைக் காங்கிரஸ் மந்திரிகள் செய்திருக்கிறார்கள். வேறு சில சட்டங்கள் அதிசீக்கிரத்தில் உருவாகலாம். தீண்டாமையை ஒழித்து ஹரிஜனங்களுக்கு ஆலயப்பிரவேச உரிமை கொடுக்கச் சட்டங்கள் வந்திருப்பது பாராட்டத் தக்கது.

பெடரேஷன்

பெடரேஷன் இன்னமும் அமுலுக்கு வரவில்லை. இந்த பெடரேஷனே இந்தியாவில் வகுப்புத் துவேஷம் வளரக் காரணமயிருக்கிறது. ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைக்குக் காங்கிரஸ் தலைவர்கள் முயற்சித்தார்கள். ஆனால் லீகின் பிடிவாதத்தால் ஒற்றுமைப் பேச்சு முறிந்தது பல இந்திய சமஸ்தானங்களில் பொறுப்பாட்சிப் போராட்டம் மும்முரமாக நடந்து வருகிறது. சில சமஸ்தான மன்னர் வலியப் பொறுப்பாட்சி கொடுத்து விட்டார்கள். பலர் இன்னமும் பிடிவாதமாக இருக்கிறார்கள் ஆனால், சீக்கிரத்தில் அந்த மன்னர்கள் வழிக்கு வந்தே தீருவார்களென்பது உறுதி.

அடுத்த போராட்டம்

பெடரேஷன் வேண்டாமெனக் காங்கிரஸ் வெறுத்துத் தள்ளி விட்டது. இந்தியர் கோரும் மாறுதல்கள் செய்தாலொழிய அதை இந்தியர் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. ஆகவே, அந்த பெடரேஷனை எதிர்த்துக் காங்கிரஸ் இவ்வருடம் ஒரு போராட்டத்தை ஆரம்பித்தாலும் ஆரம்பிக்கலாம். அப்படியானால், இந்தியாவில் ஒரு பெரிய நெருக்கடி ஏற்படுமென்பது திண்ணம். அந்தப் போராட்டத்தை நடத்தி ஜெயம்பெற இந்திய மக்கள் அனைவரும் தயாராக இருப்பார்களாக

தமிழ் நாடு

தமிழ் நாட்டில் சில ஜில்லா மகாநாடுகள் ஆங்காங்கு நடைபெற்றன அந்த மகாநாடுகளைப்பற்றி தமிழர் கவனிக்க வேண்டியதில்லை. ஆனால், ராஜபாளையத்தில் நடந்த 40 வது தமிழ் மாகாண மகாநாடு மிக முக்கியமானதாகும். ஏனெனில், தமிழ் மாகாண மகாநாடு நெருக்கடியான சமயத்தில் கூடியிருக்கிறது காங்கிரஸ் மந்திரிகள் அதிகாரத்திலிருந்த போதிலும், தமிழ் நாட்டில் பிளவுகளும், துவேஷமும் அதிகரித்து வருகின்றன. காங்கிரசில் பதவிகளுக்காக வந்து ஒட்டிக்கொண்டவர்களே இந்த பிளவுகளுக்கும், துவேஷத்துக்கும் காரணமென்பதை மறுக்க முடியாது. இந்த ஊழல்களை ஒழித்துத் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியைப் புனிதப்படுத்த வேண்டியது, புதுத் தலைவரான ராமசாமி ரெட்டியாரின் முதற் கடமையாகும். காங்கிரஸ்காரர் மந்திரிகள் அதிகாரத்திலிருப்பதால், காங்கிரஸ்காரர் கருத்தெல்லாம் பதவிகளைக் கைப்பற்றுவதிலேயே பதிந்துகிடக்கிறது ஆகவே காங்கிரஸ்காரர், காங்கிரஸ நிர்மாணத் திட்டங்களை அடியோடு மறந்துவிட்டார்கள். இன்று தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டிக்குத் தலைவராக இருப்பவர், எந்தப் பதவியும் வகிப்பவரல்ல பதவி மோகம் அவருக்குக் கிடையாதென்றே சொல்லலாம். அவர் ஒரு விவசாயி எனவே, காங்கிரசின் நிர்மாண திட்டங்களை அமுலுக்குக் கொண்டுவந்து வேலை செய்வாரென்று எதிர்பார்க்கிறோம். வெறும் தீர்மானங்களுடன் காங்கிரஸ் கமிட்டி நின்றுவிடக் கூடாது. அவற்றைக் கிரியாம்சையில் காட்ட வேண்டும.

ஏழைகளுக்கு உதவி

தமிழ் நாடு எங்கும் இன்று பஞ்சம் தலைகாட்டியிருக்கிறது ஏழை மக்களுக்கு உதவிச் செய்ய காங்கிரஸ் மந்திரிகள உடனே முன்வர வேண்டும். பஞ்ச நிவாரணத்துக்கான ஏற்பாடுகள் செய்வதோடு, வரி வஜா செய்யவேண்டியது அவசியமாகும். காங்கிரஸ் சர்க்காரிடம் பணமில்லை யென்பது உண்மையே. ஆனால், அதற்காக ஏழைகள் இரத்தத்தை உறிஞ்சுவது தர்மமாகுமா? தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியாகும் ஏழைகளுக்கு உதவிச் செய்யும் சரியான முறைகண்டு, மும்முரமாக வேலை செய்யமுன் வருவார்களாக. தமிழ் நாட்டுக்கு ஒரு விவசாயத் தலைவர் கிடைத்தது, விவசாயிகளின் பாக்யமென்றே சொல்லலாம். விவசாயிகள், தலைவரிடமிருந்து பல நன்மைகளை எதிர்பார்ப்பார்களென்பதில் சந்தேகமில்லை. அவர்கள் ஆவலைப் பூர்த்திசெய்ய வேண்டியது தலைவர் கடமை. தலைமைப் பதவி வகிப்பதோடு தலைவர் கடமை தீர்ந்துவிட்டதென்று நினைத்துவிடக் கூடாது 20 ஜோடிகள் பூட்டிய ரதத்தில் தலைவர் ஊர்வலம் எவ்வளவு சிறப்பாக நடந்ததோ, அவ்வளவுக்குச் சிறப்பாக அவருடைய நிர்வாகம் இருக்குமென தமிழர் எதிர்பார்க்கின்றனர். அந்த நிர்வாகத்தில் எவ்வித குறைவும் ஏற்படக்கூடாது. நிர்வாகம், கட்டுப்பாடு முதலியவைகளில் தாட்சண்யம் என்பது கூடவே கூடாது. மன உறுதி மகா அவசியம். முதுகெலும்பில்லாவிட்டால் தாட்சண்யம் புகுந்துவிடும். அப்புறம் நிர்வாகமே பாழ்தான் தலைவர் ராமசாமி ரெட்டியாருக்கு அதிகம் கூறவே வேண்டியதில்லை. இவ்விஷயத்தில் அவர் எச்சரிக்கையாயிருந்து, தமிழ்நாட்டுக்கும், தமிழருக்கும் அவசியமான நன்மைகளைச் செய்ய முற்படுவாராக.

விஷம் ஏறுகிறது!

வகுப்பு வாதமும், வகுப்புத் துவேஷமும் ஒரு பெரிய பீடை; இந்தியாவைப் பிடித்த ஒரு சாபமென்று சொல்லலாம். இன்று இந்தியாவில் வகுப்புத் துவேஷமே தாண்டவமாடுகிறது. அது விஷம் போல் ஏறிக்கொண்டே இருக்கிறது. இந்த வகுப்புத் துவேஷத்தை கிள்ளி எறியாவிட்டால், இதனால் பெரிய அனர்த்தங்கள் ஏற்படுவது நிச்சயம்.

காரணம் யார்?

இந்த வகுப்புத் துவேஷத்துக்குக் காரணம் யார்? சில சுயநலமிகளே காரணமென்று சொல்லலாம். வடக்கே ஹிந்து மகா சபையும், முஸ்லிம் லீக்போன்ற ஸ்தாபனங்களும் வகுப்புத் துவேஷத்தை மூட்டிவிடுகின்றன. தெற்கே, ஜஸ்டிஸ் கட்சி, சுயமரியாதைக் கட்சி, காங்கிரஸ் எதிரிகள் முதலானோர் வகுப்புத் துவேஷத்துக்கு மூலகாரணமாயிருக்கிறார்கள். சமீபத்தில் நடந்த அவர்கள் மகாநாடுகளின் போக்கும், அந்த மகாநாடுகளில் நிறைவேறிய தீர்மானங்களுமே இதை நன்கு நிரூபிக்கும்.

முடிவென்ன?

இந்த வகுப்புத் துவேஷத்தை வளரவிடவே கூடாது. அதைக் கொன்றே தீரவேண்டும் அதற்கு வழி என்ன? பொதுமக்கள்தான் அதற்கு வழிசெய்யவேண்டும். வகுப்புத் துவேஷிகளின் விஷமப்பிரசாரத்தைத் தடுக்கவேண்டும். அவர்களை தலைகாட்டவிடாமல் பொதுமக்கள் தட்டியடக்குவார்களேயானால் வகுப்புத் துவேஷம் தானாகவே ஒழிந்து போகும். இந்திய மக்கள் அனைவரும் ஒரே தாய்வயிற்று மக்கள், ஒரே சகோதரர்கள் என்ற நல்ல எண்ணம் ஏற்பட வேண்டும். அந்த எண்ணம் தேசமெங்கும் பரவ முயற்சிக்க வேண்டும். பல வகுப்பு

மணியோசை

டாக்டர் சிதாராமய்யா,
மசூலிபட்டணம்

ஆந்திர தலைவரே,

இலங்கை இந்தியருக்கும், இந்திய காங்கிரசுக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்படுத்தக் காங்கிரஸ் கமிட்டியார் உங்களை இலங்கைக்கு அனுப்பத் தீர்மானித்திருக்கிறார்கள். இது நல்ல யோசனை நீங்களும் அதற்குப் பொருத்தமானதலைவர்தான். இலங்கை இந்தியத் துயரம், வர வர மோசமாகிக் கொண்டுவருகிறது. சிங்களவர் இந்தியர் உரிமைகளைப் பறிக்க கங்கணம் கட்டியிருக்கிறார்கள். சில உரிமைகளைப் பறித்துவிட்டார்கள். சிங்களவர்களை இப்படியே விட்டுக்கொண்டு போனால், இலங்கை இந்தியருக்கு ஆபத்து நிச்சயம். இறுதியில், இந்தியரை, இலங்கையிலிருந்து வெருட்டி யடிக்கவும் துணிந்துவிடுவார்கள். ஆகவே, இப்பொழுதே இலங்கை இந்தியர் உரிமைகளைப் பாதுகாக்க, காங்கிரஸ் தீவிர வேலை செய்யவேண்டியது அவசியம். அதற்காக தகுந்த ஏற்பாடுகள் செய்ய நீங்கள் முயற்சி எடுத்துக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

டிங்—டாங்

ஜமுனலால் பஜாஜ்,
பம்பாய்.

தலைவரே,

ஜெயபூர் பிரஜா மண்டல மகா நாட்டுக்குத் தலைமை வகிக்கச் சென்ற உங்களுக்கு ஜெயபூர், மன்னர் தடை உத்திரவுபோட்டு விட்டார் உங்களை ஜெயப்பூருக்குச் செல்லவிடாமல் தடுத்துவிடுவதால், சமஸ்தான மக்களின் பொறுப்பாட்சிக் கிளர்ச்சியை நசுக்கி விட்டதாக மன்னர் மகிழ்கின்றனர் போலும்! பூனை கண்ணை மூடிக் கொண்டு பாலு குடித்தால், பூலோகமே இருண்டு விட்டதாக எண்ணிக் கொள்ளுமாம்! வெறும் பொம்மை மன்னர்களான சுதேசமன்னர்களெல்லோரும் கண்ணை மூடிக் கொண்ட பூனைகளைப் போலவே இருக்கிறார்கள். உங்களைத் தடுப்பதால் பொறுப்பாட்சிப் போராட்டம் முப்பூரடாதுமென்பதை ஜெயபூர் அரசர் அறியவில்லை, அது அவருடைய அறியாமையையே காட்டுகிறது. சர்தார் பட்டேலுடன் சமரசம் செய்துகொள்ள மறுத்த ராஜ்கோட் மன்னர் என்ன கதியானார்? அந்த திவானின் கதி என்னவாயிற்று? இருவரும் மண்ணைக் கவ்வி, பட்டேலை சரணாகதியடைந்த சம்பவத்தை மறந்துவிட்டார்களா? பட்டேல் வெற்றி மாலை சூடினார். ஜெயபூர் அரசரும் தோல்வியடைந்து மண்ணைக் கவ்வும் நாள் அதிக தூரத்திலில்லையென்றே நினைக்கிறேன். உங்களுக்குப் போட்ட தடை உத்தரவே அவர் தோல்விக்கு முதல் அஸ்திவாரமாக இருக்குமென்பதில் சந்தேகமில்லை.

டிங்—டாங்

அப்துல் கபூர்கான்,
பெஷாவர்.

எல்லைக் காந்தியே,

வகுப்புத் துவேஷம் இந்தியா வெங்கும் விஷம்போல் ஏறிவரும் இச் சந்தர்ப்பத்தில், வகுப்புவாதிகளுக்கு நீங்கள் சரியான சவுக்கடி கொடுத்திருக்கிறீர்கள் உங்கள் போன்ற மெழிகளைக் காணும் வகுப்பு வாதிகளின் முகம் கருக்குமென்பதில் சந்தேகமில்லை. 'நான் ஆண்டவனின் அடிமை. மனித வர்க்கத்துக்கு தொண்டு செய்வதே என் கடன். இதில் ஹிந்துக்கள், முஸ்லிம்கள், சீக்கியர், கிறிஸ்துவர் என்ற வித்தியாசமே கிடையாது சுதந்திரப் போராட்டத்தில் ஜாதி வித்தியாசத்துக்கு இடமேது?" என்று பெஷாவர் கூட்டமொன்றில் கூறினீர்கள்; உண்மை; இஸ்லாத்தைப் பாதுகாக்க அவதாரம் எடுத்திருப்பதாகக் கூறும் வகுப்பு வாதிகளுக்கு உங்கள் போன்ற மெழிகள் நாராசம் போலிருக்கலாம். ஆனால், உண்மையான முஸ்லிம் மக்கள் உங்கள் தங்க மொழிகளை வரவேற்பார்களென்பது சத்தியம்.

டிங்—டாங்

ஹக்-ஹாயத்கான்,
பாடலிபுரம்

புலி-சிங்கங்களே!

பாழ்சலம், வங்காளப் புலி, சிங்கங்களென்று உங்களைக் கருதியிருந்தேன் ஆனால், உங்களை "அட்டாடர்க்" என லீக் வீரரான அவுரங்க சீப் அழைக்கிறார். இந்திய முஸ்லிம்கள் காலஞ் சென்ற "அட்டாடர்க்" கமால் பாஷாவைக் கவனிக்க வேண்டியதில்லையாம். நீங்கள் இருவருமே இரு "அட்டாடர்க்"களாம்!" ஆகா! என்ன அழகான பெயர்! ஆனால், ஒன்று; "அட்டாடர்க்" ஒருவராகத்தானிருக்கமுடியும். இருவருக்கு இடமில்லை. உங்களில் யாரைத்துருக்கிக்கு ஏற்றுமதி செய்வதென்பது தெரியவில்லை. துருக்கிக்கு உங்களில் யாராவது போனால், அங்கு உங்களை ஏற்றுக் கொள்ளுவார்களா? என்னமோ சந்தேகந்தான்; துருக்கி 'அட்டாடர்க்" எங்கே, நீங்கள் எங்கே? அவர் காலஞ் சென்றார். என்றாலும், நீங்கள் அவர் அருகில் நிற்கக்கூட அருகதையுடையவர்களல்ல வென்பதே என் கருத்து. சிங்கம், புலி காடிகளென நீங்கள் வாயளவில் வீசம் பேசலாம். ஆனால், துருக்கி 'அட்டாடர்க்" உண்மையான வீரர் அவர் வீரத்துக்குமுன் உங்கள் வாய் வீரம் தூசிக்குச் சமம் என்பது ஞாபக மிருக்கட்டும்.

டிங்—டாங்

மௌல்வி. மூகமத் பரூக்,
பாடலிபுரம்.

லீக் வீரரே,

மூஸ்லிம் லீக் மகா நாட்டில், முஸ்லிம் பெண்கள் முக மூடி அணியும் பழக்கத்தை எடுத்துவிட வேண்டுமென்றும் முஸ்லிம் பெண்கள் ஏராளமாக அரசியலில் ஈடுபட வழி செய்யவேண்டுமென்றும் ஒரு தீர்மானம் கொண்டுவந்தீர்கள். உங்கள் தீர்மானம் என்ன கதியடைந்தது? எதிர்ப்பு; வைதீக முஸ்லிம் லீக்காரர் தீவிரமாக எதிர்த்தார்கள். ஒரே கூக்குரல். கடைசியாக ஜின்னா தலையிட்டுத் தீர்மானத்தை நிறைவேற்றி வைத்தார். லீக்காரரின் சமூக சீர்திருத்த வேகத்தைப் பார்த்தீர்களா? இந்த லீக்காரர்தான் வகுப்புவாத மற்றவர்களாம்; தேசீய மனப்பான்மையுடையவர்களாம் பலே தமாஷ்!

டிங்—டாங்

சர். பன்னீர் செல்வம்,
சென்னை.

கூ. ம. கிறிஸ்துவரே!

கிறிஸ்துவ சமூகத்துக்கு நீங்கள் ஒரு திருஷ்டிப் பரிகாரம். உங்கள் போக்கும், பேச்சும், சகவாசமுமே அதை நிரூபிக்கப் போதுமானது கண்டதே காட்சி, கொண்டதே கோலமென்னும் சுயமரியாதைக்காரர் கொள்கையை அணுவளவும் நழுவவிடாமல் தாங்குப் பிடியாய்ப் பிடித்துக்கொண்டிருக்கிறீர்கள். காங்கிரஸ் சர்க்காரை நீங்கள் தீவிரமாக எதிர்க்கக் காரணமென்ன? போதுமிடங்களிலெல்லாம் பார்ப்பனத் துவேஷத்தை மூட்டிவிடுவதின் நோக்கமென்ன? உங்களுக்குள்ள தமிழ் பக்தியா அல்லது, தமிழ் நாடுமீது கரைபுரண்டோடும் உங்கள் அளவிலாத அன்பா? உள்ளதை சொன்னால் ஒன்றுமில்லை என்றுதான் சொல்ல வேண்டும். அன்பும் இல்லை, ஆதரவுமில்லை. சுயநலமும், பழிவாங்கும் சுபாவமுமே காரணமென்பதில் சந்தேகமில்லை. பிரதம மந்திரி பதவி போன கால முதல், உங்கள் வயிற்றெரிச்சலைக் காட்டிக்கொள்ளக் காங்கிரஸையும் பார்ப்பனரையும் தீவிரமாக எதிர்த்து வருகிறீர்கள். பார்ப்பனர் தமிழர் அல்ல என்ற விசித்திரத்தை உங்கள் விசித்திர மூளையால் கண்டுபிடித்தீர்கள்! அப்படியானால், ஆங்கில மோகங் கொண்ட நீங்கள் தமிழரா? பார்ப்பனர் சமஸ்கிருத பாஷையை அர்ச்சனை, கலியாணம், கரும திகளுக்கு உபயோகித்து வருவதாகக் குறை கூறுகிறீர்கள் அதனால் அவர்கள் தமிழர் அல்லவென்று காரணம் காட்டுகிறீர்கள். உங்கள் மத அர்ச்சனைகளுக்கு நீங்கள் உபயோகிக்கும் பாஷை எது? தமிழா? இல்லவே இல்லை. ஆங்கிலம், அல்லது லத்தீன் பாஷை அப்படியானால் நீங்கள் சுத்த தமிழரோவென்று கேட்கிறேன் உங்கள் கண்ணிலிருக்கும் உத்திரத்தை எடுத்துவிட்டுப் பிறர் கண்ணிலிருக்கும் துரும்பைப் பாருங்கள். அதுதான் கிறிஸ்துவ தருமம், முன்பின் யோசிக்காமல் உளறிக்கொட்டி, உங்களுக்கும், உங்கள் சமூகத்துக்கும் இழிவைத் தேடிக்கொள்ளவேண்டாம். ஞாபகமிருக்கட்டும்.

டிங்—டாங்

சோமசுந்தர பாரதியார்,
சென்னை.

தலைப்பில்லாத வீரத் தமிழரே!

ஒரு பைத்தியக்காரன், அவனைச் சுற்றியுள்ள எல்லோரையும் பைத்தியக்காரன் என்றே எண்ணிக்கொள்ளுவான். அதே மனப்பான்மையே உங்களிடமிருக்கிறது தமிழர் எல்லோரையும் பைத்தியக்காரர் என்று எண்ணிக் கொண்டு நீங்கள் இறுமாப்புடன் பேசி வருகிறீர்கள். ஏதோ பெரிய தமிழ் பக்தரைப்போல் நடித்து வருகிறீர்கள். ஆனால் உண்மையைக் கூறுகிறேன். உங்களிடம் உண்மையான தமிழ் பக்தியோ வீரமோ கிடையாது. மகாத்மா கிலி உங்களைப் பிடித்து ஆட்டி வைக்கிறது வேலூரில் நடந்த தமிழர் மகா நாட்டில் கொடியேற்றி வைத்துப் பேசியபோது "தமிழர் நியாயத்தை நிலைநாட்ட இறைவனையும் எதிர்க்கும் கொள்கையுடையவர்கள். அவர் மகாத்மா ஆனாலும் கவலை இல்லை... தமிழ்க் கொடி உலகமெங்கும் பறக்க வேண்டிப் பாடுபடுவோம். அதை இறைவனாலும் இறக்க முடியாதென்றால், எந்த மகாத்மாவைப் பற்றியும் எங்களுக்குக் கவலை இல்லை!" என்றீர்கள். உங்கள் பேச்சில் அடிக்கடி மகாத்மாவை நீங்கள் குறிப்பிடவேண்டியதின் அவசியமென்ன? கடவுளைவிட மகாத்மா பெரியவரா அல்லது, உங்களை நீங்கள் ஒரு பெரிய மகாத்மா வென்று நினைத்துக் கொண்டு பேசுகிறீர்களா? உங்கள் பேச்சிலிருந்தே உங்களுக்கு மகாத்மா கிலி பிடித்திருக்கிறதென்பது தெளிவாகிறது. உங்கள் காலம் மலையேறி விட்டது, உங்கள் அழிவுகாலத்துக்கே இந்த புத்தி! அந்த அழிவு காலமும் சீக்கிரத்தில் வரப்போகிறதென்பதை நன்றாக ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்!

டிங்—டாங்

பொப்பிலி ராஜா.
பொப்பிலி

ராஜா சாஹேப்,

நீங்கள் சென்னையில் தானிருக்கிறீர்களா, அல்லது, பொப்பிலியில் இருக்கிறீர்களா வென்பது தெரியவில்லை, சென்னையில் அற்புதமாக நடக்கும் ஜஸ்டிஸ் கட்சி மகாநாட்டில் உங்கள் பெயரையோ, பேச்சையோ காணோம். ஏன்? ஜஸ்டிஸ் கட்சியை அடியோடு தலைமுழுகி விட்டீர்களா? அப்படித் தலை முழுகியிருப்பீர்களானால் அதைப்பற்றி ஒரு அறிக்கை ஏன் வெளியிடக்கூடாது? நீங்கள், ஜஸ்டிஸ் கட்சித் தலைவர் பதவியை ராஜிநாமா செய்திருக்கும், உங்களைக் கனியன் சங்கிலிபோல் கட்டிப் பிடித்து, அந்தக் கட்சியில் வைத்திருக்க ராமசாமி நாயக்கரும், மற்றவர்களும் முயற்சித்தார்கள். நீங்களும் அவர்கள் வற்புறுத்தலுக்கு இசைந்து ஜஸ்டிஸ் கட்சி மகா நாட்டில் கலந்து கொள்ளுவீர்களென்று எதிர்பார்த்தேன். ஆனால், அந்த மகா நாட்டில் உங்கள் நாமத்தையே காணவில்லை நீங்கள் அடியோடு அந்தக் கட்சியிலிருந்து விலகிவிட்டீர்களென்றே நினைக்கிறேன் நீங்கள் விலகுவதே நல்லது. ஏனெனில், புதிதாக உயிர் பெற்றிருக்கும் ஜஸ்டிஸ் கட்சி பழைய ஜஸ்டிஸ் கட்சியல்ல. அது உருக்குலைந்து, உருமாறி, ஒன்றுக்கும் உதவாத ஒரு சுயநலக் கட்சியாக முளைத்திருக்கிறது, அது நீடித்திருக்கப் போவது மில்லை. அத்துடன் நீங்கள் மீண்டும் சம்பந்தம் வைப்பீர்களேயானால், உங்களுக்குத் தற்போதிருக்கும் அற்ப சொற்ப மரியாதையும் போய்விடும். எவரேனும் அந்தக் கட்சியைக் கட்டியழட்டும். நீங்கள் அதைத் தீண்டினீர்களோ, உங்கள் சுய மரியாதை போய் விடும். அக்கட்சியின் அருகிலும் நெருங்காதீர்களென்றே நினைக்கிறேன். நெருங்கினால் உங்கள் சுயமரியாதைக்கு மட்டுமல்ல, உங்கள் பணத்துக்கும் ஆபத்து! பத்திரம்.

டிங்—டாங்

களுக்கிடையே மனக் கசப்பு ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இந்த வழிகளில் இந்திய மக்களை அனைவரும் உழைப்பாளரேயானால், வகுப்பு வாத விஷத்தை முறித்து, வகுப்பு ஒற்றுமையை இலகுவில் ஏற்படுத்தி விடலாம். தலைவர்கள் இவ் விஷயத்தில் விசேஷ கவனஞ் செலுத்துவார்களாக.

Rg. No. 3379
ரிஜே விஜிடபின் டானிக்ஸிரப்
சிறந்த ரத்த புஷ்டியை உண்டாக்கும்
டாக்டர்கள் இதை பெருமையாக புகழ்ந்து அனேகருக்கு சிபார்சு செய்கிறார்கள். சாம்பில் வேண்டுவோர் 0—2—0 ஸ்டாம்பு அனுப்பினால் உடனே அனுப்பப்படும்.
எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும். ஏஜண்டுகள் தேவை.
சி. எப். அண்டு சன்ஸ், 503, தங்கசாலைத் தெரு சென்னை.



இந்தக்கார் மனதுக்கேற்ற சகல வசதிகளும் உடையது

சிக்கனமான, 13 குதிரை வேகமுள்ள ஆறு ஸிலிண்டர் இஞ்சின் உடையது. காரில் போவதற்கு ஏற்றவாறு பெரிதாக அமைக்கபபட்டிருக்கிறது. என்றாலும், இதனால் நஷ்டமில்லை; பவர் அனாவசியமாகச் செலவாவதுமில்லை. அழகானதும், வசதியுடையதுமான பாடியுடையது. காருக்குப்பின்னால் வேண்டிய சாமான்களை வைத்துக்கொள்ளப் போதிய இடமுண்டு. சாதாரணமான, ஆனால், நல்ல பலம் பொருந்திய ஸ்பிரிங் சீட்டுகள் உடையது. பொதுப்படக் கூறினால், விலைகொடுத்து வாங்குவதற்குச் சரியான கார் இதுதான். இந்தச் காரை வாங்குவதால், கவலையின்றி, உபயோகித்து வரலாம்.

சதரன் மோட்டார்ஸ் (அடிசன் அண்டு கம்பெனி, லிமிடெட்.,) **மதராஸ்.**

தமிழ் நாட்டுக்கு அதிகாரம்பெற்ற ஜில்லா டீலர்கள்:—

Ar. A. செண்பக நாடார், ஃ P. V. P. வாலசுப்பிரமணிய நாடார், மதுரை ஃ திருநெல்வேலி.
பழனியப்பா ஃ சன்ஸ், காரைக்குடி. தி மாடர்ன் மோட்டார் ஃ ஜெனரல் டிரேடிங் கம்பெனி, தஞ்சாவூர்.

சென்ற வருடம் மனமுவந்து ஆதரித்து உதவி புரிந்த எல்லா அன்பர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்

அவர்களுக்கு ஆனந்தகரமான

கிறிஸ்மஸ் புது வருட வாழ்த்துச் செய்திகளைச்

சந்தோஷத்துடன் அறிவித்துக் கொள்ளுகிறோம்

தாமஸ் ரொட்டிறிகோ & சன்ஸ்

போஸ்ட் பாக்ஸ் நெ. 1209 சென்னை

நங்கூர மார்க் பற்பொடி

ஆங்கிலோ-ஆயுர்வேத முறைகளால் தயாரிக்கப்பட்டது

இப் பற்பொடியை பிரதி தினமும் காலை மாலை உபயோகித்து வந்தால், பல்வலி, புழுவரித்தல், இரத்தம் வடிதல், ஊன் தடித்தல், துர்நாற்றம் இவைகளைப் போக்கி, பற்களை முத்துக்களைப்போல் பிரகாசிக்கச் செய்யும்.

எல்லா முக்கிய ஊர்களிலும் ஏஜண்டுகள் தேவை

அமல்ஸ் லாபரேட்டரி,
5, சவுரிமுத்து தெரு, மண்ணடி, மதராஸ்.

Amels Laboratory,
5, Savarimuthu Street, Mannady, MADRAS.

தாமதம் வேண்டாம்! உடனே எழுதுங்கள்!!

மாதந்தோறும், அவ்வப்போதும் வெளிவரும்

லோகசக்தி பிரசுரங்களை

தென்னாடு முழுவதும் விற்பனை செய்வதற்கு

ஏஜண்டுகள் தேவை

விவரங்களுக்கு:— லோகசக்தி ஆபீஸ்,
21-A, சௌத்கூவம் ரோட், சென்னை.

க்ஷவரத்திற்கு பின்னும் முகப்பரு வரவொட்டாமல் தடுக்கவும், யௌவனத்திற்கும் பிரசித்திபெற்ற பாப்பி கிரீம். ஆண், பெண் இரு பாலரும் உபயோகிக்கக்கூடியது. பிரான்ஸ் அழகுப்போட்டியில் பரிசுப்பெற்றது. விலை அ. 6. ஏஜண்டுகள் தேவை கேட்லாக் இனம். $1\frac{1}{2}$ அணா ஸ்டாம்பு அனுப்பினால் சாம்பில் அனுப்பப்படும். விவரங்களுக்கு:-"பாப்பி பேர்பியுமரீஸ்,"
16, பைரூன் ஜங் தெருவு, மவுண்ட் ரோட், மதராஸ்.

கிளிப்பேச்சு

மூளைக் கொதிப்பு மகா நாடுகள்

- அவாளுக்கு இவாள்? -

வசையில் ஏட்டிக்குப் போட்டி

கோபுரப் பொம்மைகள் புத்தி!

செட்டி ஆற்றேடு போவானு?

கிளியே, இவ்வாரம் விசே ஷங்கள் என்ன?

இது கிறிஸ்மஸ் வாரம். கிறிஸ்தவர்களுக்கு மட்டும் விசேஷமல்ல; உலகமெங்கும் விசேஷந்தான். தமாஷ்களுக்கும், உல்லாச யாத்திரைகளுக்கும் ஏற்ற காலம். பொதுவாக மகாநாடுகள் நடப்பது இந்தக் காலத்தில்தான். இது மழை காலமானதால் மூளை நன்ருக குளிர்ச்சி படைத்திருக்கும் தலைவர்கள் நிதானமாக யோசித்துப் பேச ஏதுவாக விருக்குமு இந்தக் கால நிலைமையை உத்தேசித்துத் தான் அநேகமாக மகாநாடுகளை இவ்வாரத்தில் நடத்தி வருகிருர்களோ போலும்! ஆனல், இந்தக் குளிர் காலத்தில் கூட சில மகாநாட்டுத் தலைவர்களுக்கும், மகாநாட்டுப் பிரதிநிதிகளுக்கும் மூளை குளிர்ச்சியாக இல்லை. அதற்கு விரோதமாக அதிகக் கொதிப்படைந்திருக்கிறது குளிர் அதிகமாக இருப்பதால் அவர்கள் மூளை கொதிப்படைந்து விட்டதோ என்னமோ தெரியவில்லை. சென்னையில் கூடிய ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் மூளை கொதிப்பு! வேலூரில் நடந்த தமிழர் மாகாண மகாநாட்டுக்குச் சென்ற, பன்னீர் செல்வம், சோமசுந்தரபாரதியார், மூத்தையா முதலியார் மூளைக்கொதிப்ப! அங்கு நடந்த விரத தாய்மார் மூளைகூட கொதிச்சம் கொதிப்படைந்தே இருந்ததாகத் தெரிகிறது தெற்கேதான் இந்த அவதி யென்ருல் குளிர்மிகுந்த வட தேசத்திலகூட, ஹிந்து மகாசபை, மூஸ்லிம் லீக் தலைவர்கள் மூளைகளும் கொதிப்படைந்துவிட்டது! இந்த மகாநாடுகள் நடந்தபோது தலைவர்கள் பேசிய பேச்சைக் கண்டுதான் இந்த முடிவுக்கு வந்தேன். ஒவ்வொரு மகாநாட்டில் நடந்த பேச்சுகளையும், உச்சகளை தலைவர்கள் மூளையில் அற்புதமாகப் பிரகாசித்த 'ஆராய்ச்சிகளையும் சுருக்கமாகக் கூறுகிறேன்.

அப்படியானுல், மகா நாடுகளில் பெரிய தமாஷ்கள் நடந்திருக்கும்போலும்!

தமாஷ்களா? அட கர்மமே! என்ன ஆபாசமான பேச்சுக்கள் தலைவர்களுக்கு சுயபுத்தியென்பதே இல்லை. மகா நாடு என்ருல், என்னமோ நாடக மேடையென்று நினைத்துக் கொண்டார்கள் போலும்! அகில இந்திய ஹிந்து மகா சபையின் 20-வது மகா நாடு நாகபுரியில் நடந்தது வி டி சாவர்க்கர் தலைமை வகித்தார். இவர் லேசான பேர் வழியல்ல பெரிய தியாகி. ஒரு காலத்தில் தீவிர வாதி 20 வருடங்களுக்கு மேலதிகமாக அந்தமானில் உயிர்த் தியாகம் செய்தவர் அப்பேர்ப்பட்ட சாவர்க்கருக்கு இந்தியா திரும்பியதும் வகுப்புவாதம் தலைக்கேறி விட்டது அவருடன் சேர்ந்து கொண்டவர் வரவேற்புக் கமிட்டித் தலைவர் எம். ஜி சித்னவிஸ் இருவரும் சேர்ந்து காங்கிரஸ்மீது ஒரு பெரிய வசை புராணம் பாடினர்கள். காங்கிரஸ் ஒரு வகுப்புவாத ஸ்தாபனமென்று அழுத்தம் திருத்தமாய் கண்டித்தார்கள் காங்கிரசை எவ்வளவு வேண்டுமானலும் எதிர்க்கட்டும் கண்டிக்கட்டும்; ஆனல், காங்கிரஸ் அசையாத இமயமலே; கங்கா நதி போன்றது. இந்தக் குப்பைக் கூளங்களையெல்லாம் அடித்துக்கொண்டு போகும் சக்தி அதற்கு உண்டு. ஆனல் அவர்கள் வகுப்புத் துவேஷங்கொண்டு மூஸ்லிம்களையும், கிறிஸ்தவர்களையும் தாக்கியதுதான் எனக்குப் பிடிக்கவில்லை. 'ஏமாந்த ஹிந்துக்கள் அரசியல் அதிகாரம்பெற பிரிட்டிஷாருடன் சண்டைபோட்டார்கள் லக்ஷக்கணக்கானவர்கள் சிறை சென்றனர். சொத்து சுகமெல்லாம் இழந்தனர். சொல்ல முடியாத கஷ்டப்பட்டார்கள். அந்தக் காலத்தில் 'மதில்மேல் பூனை போல் இருந்தார்கள் மூஸ்லிம்கள்! இந்தியாவுக்கு ஓரளவு அரசியல் சுதந்திரம் கிடைத்ததும், மதிலிலிருந்து குதித்து, அந்த சுதந்திரத்தில் பங்குபோட முன்வந்துவிட்டார்கள்'' என்று சாவர்க்கார் மூஸ்லிம்கள்மீது குறைகூறுகிருர். ''ஜெர்மனியில் ஜெர்மனியர் எப்படியோ அப்படியே இந்தியாவில் ஹிந்துக்கள். யூதர் ஒரு வகுப்பினர்; யூதர்களைப் போலவே இந்தியாவில் மூஸ்லிம்கள் ஒரு வகுப்பினர்'' என்று சாவர்க்கர் கூறுகிருர். பெருந்தியாகியான சாவர்க்கர் வாயிலா இந்த வார்த்தைகள் வருகின்றன வென்றுகூட சந்தேகப்பட்டேன். ஆனல், பேசியது சாவர்க்கர்தான்! அப்பொழுது தான் எனக்குச் சந்தேகம் வந்தது மூளைக் கொதிப்பை நினைத்துக் கொண்டேன். உஷ்ணத்தால் அல்ல, அதிக குளிர்ச்சியால், ஹிந்து என்ற அதிகப்பற்றுதலால் ஏற்பட்ட அகம்பாவமே, அவரை இவ்வாறு பேசத் தூண்டியிருக்கிறதென்பதை அறிந்துகொண்டேன். இந்தியா ஹிந்துக்களுக்குத் தான் சொந்தமா? இந்தியாவில் பிறந்து இந்தியத் தாய் மடியில் தவழ்ந்து, இந்தியாவிலேயே வளர்ந்த மூஸ்லிம், கிறிஸ்தவர், சீக்கியர், பார்சிகள் எல்லோரும் இந்தியாவிலிருந்து ஓடிவிட வேண்டுமா? அவர்கள் எங்கு செல்லுவது? வங்காளக்குடாக் கடலில் போய் விழுந்து மடிவதா? சாவர்க்கர் இதற்கு என்ன பதில் சொல்லப்போகிருர்? ஒன்றுஞ் சொல்ல முடியாது. சவார்க்காருக்கும் அவர் கோஷ்டியினருக்கும் இந்தியாவில் என்ன உரிமை உணடோ, அதே உரிமை இந்திய மக்கள், அனைவருக்கும். சகல மதத்தினருக்கும், வகுப்பினருக்கும் உண்டென்பதை சாவர்க்கர் மறந்துவிடவேண்டாம் தென்னட்டிலுள்ள சுயமரியாதைக்காரர்தான் தமிழ் நாடு தமிழருக்கே, மற்றவர்களெல்லாம் தமிழ் நாட்டிலிருந்து மூட்டை கட்டவேண்டுமெனக் கூறுகிருர்களென்ருல், இந்த மூடப்பிரகஸ்பதிகளையும் தோற்கடித்துவிடக் கூடியவாகள் வட நாட்டிலும் இருக்கிருர்கள் என்று அறிந்து கொண்டேன்

மெய்தான் வகுப்புவாதமே ஒரு பைத்தியம். கிர்மூடத் தனம். இந்த இருபதாம் நூற்ருண்டில்கூட இத்தக்கர் டைங்கள் வாதம பேசிக் கொண்டிருக்கின்றன

மெய்தான்; ஹிந்து மகா சபை பிரகஸ்பதிகளுக்குத்தான் இந்த மூளைக் கொதிப்பென்ருல், பாடலிபுரத்தில் கூடிய மூஸ்லிம் லீக் தலைவர்களுக்கு ஹிந்துக்களைவிட மூளைக் கொதிப்பு அதிகம் அவாளுக்கு இவாள் எழுந்திருந்து உண்பாளா. ஹிந்து, வகுப்புவாதிகளுக்கு மூஸ்லிம் லீக்வாதிகள் சபபட்டையா வென்றுபோட்டிபோட ஆரம்பித்துவிட்டார்கள். மூஸ்லிம் லீக் மகாநாடு ஜின்ன தலைமையில் கூடியது. ஜின்ன லேசான பேர்வழியா? காங்கிரஸ்மீது ஒரு பய்ச்சல் பாய்ந்தார்; பழைய பல்லவியை பாடினர் மூஸ்லிம் லீக் ஒன்றே மூஸ்லிம்களின் ஏக பிரதிநிதி சபையென்று மகா பலத்துடன் அழுத்தமாகப் பேசினர். காங்கிரஸ் வகுப்புவாத சபை யென்ருர் சிறந்த அரசியல் வாதியான ஜின்ன, இவ்வளவு பேசும் போது, மற்ற மூஸ்லிம் தலைவர்கள், விசேஷமா, சிங்கம் புலி, கரடிகளான பஸ்லுல் ஹக், சிக்காந்தர் ஹாயத்கான் முதலியோர் சும்மா இருப்பார்களா?! அவர்கள் பரம்பரையும், பிறவிக் குணமும் தெரிந்ததுதான்! லீக் மகா நாட்டில் நிறைவேறிய தீர்மானங்களின் போது நடந்த வாக்குவாதங்கள் தான் அற்புதமானவை! காங்கிரசை எதிர்த்தும், காங்கிரஸ் சர்க்காரில் மந்திரி பதவி வகிக்கும் மூஸ்லிம்களை ராஜிநாமாச் செய்து வெளிவரும்படி செய்யவும் லீக் தலைவர்கள் சட்ட மறுப்புச் செய்யப் போகிருர்களாம்! சட்ட மறுப்பு என்ற பேச்சை எடுத்தது, லீக் ஆரம்பித்த காலமுதல் இதுதான முதல் தடவை. சட்டமறப்பு ஆரம்பித்தால, ஹக் பாய்ந்து வரத் தயார் என்று மார் தட்டினர் சிக்காந்தர் மூச்சு விடவில்லை. இதர தலைவர்கள் கூட பாதி மனதில் தயார் என்ருர்கள். அப்படியிருந்தும், சட்டமறுப்புத் தீர்மானம நிறைவேறவில்லை சட்டமறுப்பு ஆரம்பிபபது அவசியமா, இல்லையாவென்பதை முடிவு செய்து, சட்டமறுப்பை ஆரம்பிக்கும் பொறுப்பை தலைவருக்கு விட்டு விட்டார்கள். நல்ல வேளை; லீக் சட்டமறுப்பு ஆரம்பித்துவிட்டால், அப்புறம் என்ன செய்வது? எங்கு போவது என்றுகூட நான் திகைத்துப் போனேன். சட்டமறுப்புத் தீர்மானத்தை ஒத்திப்போட்ட பின்தான் என் மனம நிம்மதி அடைந்தது! பெடரேஷன் எதிர்ப்புத் தீர்மானத்தையும் லைவர் பொறுப்பிலேயே விட்டுவிட்டார்கள். பெடரேஷனை லீககாரர் எதிர்க்கத்தான் செய்கிருர்களாம! ஆனல், காங்கிரஸ் பெடரேஷனை ஆதரித்துவிட்டால் என்ன செய்வது? லீக் பெடரேஷனைப் பகிஷ்கரிக்கும காங்கிரஸ் பகிஷ்கரித்தால், லீக் பெடரேஷனை ஆதரிக்கும். இதற்காகவே பெடரேஷன் தீர்மானத்தை தலைவர் ஜின்ன பொறுப்பில் விட்டுவிட்டார்கள். சமஸ்தானங்களில் நடக்கும் பொறுப்பாட்சிப் போராட்டத்தை லீக்கார பலமாகக் கண்டித்தார்கள். அது காங்கிரஸ் சூழ்ச்சியாம்! காங்கிரசுக்கு மெஜாரிட்டி தேடவே இந்தத் தந்திரம செய்கிருர்களாம்! காங்கிரசுக்குப் பலம் இருப்பதை லீக்காரரும், ஹிந்துமகா சபையினரும் அறிந்திருக்கிருர்கள் அதற்காகத்தான் இரு சாராரும காங்கிரசைப் பலமாக எதிர்த்து வருகிருர்கள் அவர்கள் எதிர்ப்பது ஒன்றே காங்கிரஸ் பலம் பொருந்திய ஒரு பெரிய அரசியல் ஸ்தாபனமென்பதை நிலைநாட்டுகிறது. இவர்கள் மட்டுமா? மிதவாதிகள் சுமமுதலிய எல்லா சுயநலக்கும்பல்களும் காங்கிரசை எதிர்க்கின்றன. காங்கிரசை பொது மக்கள் ஆதரிப்பதுதான் இந்த எதிர்ப்புக்கெல்லாம் காரணம். இந்தச் சுண்டெலி களும் பல்களால் காங்கிரசைத் தகர்த்துவிட முடியுமா? அது பகற் கனவு.

(அடுத்தப் பக்கம் பார்க்க)

கிளிப்பேச்சு

(முன் பக்கத் தொடர்ச்சி)

அது பகற் கனவுதான், சந்தேகமென்னவிருக்கிறது? போகட்டும், லீக்காரர் அத்துடனாவது நிறுத்திக் கொண்டார்களா?

இல்லை; பாலஸ்தீன அரபியருக்கு அநுதாபம் தெரிவித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றினார்கள். இத் தீர்மானத்தைக் கொண்டுவந்தவர் ராஜா அலி; இவர் யார் தெரியுமா? தென்னாப்ரிக்காவில் இந்திய ஏஜண்டாக இருந்தவர். இவர் யூதர்களையும், பிரிட்டிஷாரையும் தாக்கினார். யூதர்களுக்குத் தேசமே கிடையதென்ற ஒரு பிரமாதமான ஆராய்ச்சி வெடி குண்டு போட்டார். யூதர்களை அரேபியாவில் கொண்டு பிரிட்டிஷார் குடியேற்றுவது, கடவுளின் ஆணைக்கு விரோதமாகப் போவதாகுமென்றார்! என்ன அபூர்வமான மூளை! பிரிட்டிஷார் ஜெர்மானியரைவிடக் கொடியவர்கள் என்றார் உத்தியோகம் பார்க்குமளவும் ராஜா அலி பரம ராஜபக்தர்; இப்பொழுது அவர் பிரிட்டிஷாரை எதிர்க்கும் வீரர்? பிரிட்டிஷார், ஹிந்துக்கள் இருவரும் முஸ்லிம்களுக்கு யூதர்கள் என்று கோபாவேசமாகப் பேசினார்கள் வேறு சில தலைவர். மேனாடுகளில் பிரிட்டிஷாரும், கீழ் நாடுகளில் ஹிந்துக்களும் "ஷைலாக்"கள்; அதாவது, கொடிய யூதர்கள் என்று கராச்சி லீக் வீரர் அப்துல் கனீக் கூறினார் இன்னம் இதுபோன்ற வசைமொழிகள் சரமாரி பாய்ந்தன. ஹிந்துக்களுக்கு, முஸ்லிம்கள் சப்பட்டையாவென்று இருசாராரும் வாய் வீராப்புக்காட்டிக்கொண்டார்கள். இந்த ரீதியில் மகாநாடுகள் நடைபெற்றன. இந்த மகா நாடுகள் நிதான புத்தியுடன் நடைபெற்றனவென்று கூறுவதா, அல்லது மூளைக் கொதிப்புடன் நடைபெற்றதென்று கூறுவதா?

இவை மூளைக் கொதிப்பு மகாநாடுகள் என்பதில் சந்தேகமில்லை. வேறு மகாநாடுகள் நடந்தனவா?

ஆம்; டில்லியில் அகில இந்திய பெண்களின் 15 வது மகாநாடு நடைபெற்றது. ராணி லட்சுமிபாய் ராஜ்வதி தலைமை வகித்தார் ஆனால், இந்த மகாநாடு வேலூர் தமிழ் தாய்மார் மகாநாட்டைப் போல நடக்கவில்லை. வேலூர் தாய்மாருக்குப் பரந்த நோக்கமில்லை. கீழ் நோக்கிய புத்தி! தமிழ் நாடு என்று அடித்துக்கொள்ளுகிறார்கள் கோடிக்கணக்கான இந்தியப் பெண் மக்களின், தமிழ் தாய்மார்களின் நிலைமை அவர்களுக்குத் தெரியவில்லை கிணற்றுத் தவளைக்கு என்ன தெரியும்? அது கிடக்கும் கிணற்றையே பெரிய சமுத்திரமென்று எண்ணிக்கொள்ளும். தமிழ்தாய்மார் நிலைமை இன்று அப்படித்தானிருக்கிறது. டில்லித் தாய்மார் மகாநாட்டில் பல அரிய தீர்மானங்கள் நிறைவேற்றினர் பெண் மக்கள் அனைவர் விடுதலைக்கும் போராட வேண்டுமென்பது அவர்களுடைய பரந்த நோக்கம். குறுகிய நோக்கமல்ல. அந்த மகா நாட்டுக்குக் காந்திஜி செய்தி அனுப்பியிருந்தார். அதை தமிழ் தாய்மார் கட்டாயம் அறிய வேண்டும். பெண்கள் தாங்களாகவே முன்னேற்ற மடைய வேண்டும் (பிறர் தூண்டுதலால் அல்ல; அல்லது பிறர் பணத்தால் அல்ல) பெண்கள் விரும்பினால், அவர்கள் அஹிம்ஸா தர்மத்தை வெற்றிகரமாக்குவதில் உதவிபுரியலாம். (ஹிம்ஸையியல் அல்ல.) ராட்டினத்தின் மூலம் கோடிக்கணக்கான சகோதரிகளுக்கு சேவை புரியலாம். (சமைத் தணிகளால் சேவைபுரிய நினைக்கவேண்டாம்.) பெண்கள் கதர் தரிப்பதின் மூலம் அவர்கள், ஏழைக் குடும்பங்களுக்கு உதவி புரியலாம் (ஹிம்ஸையை எதிர்ப்பதால் உதவி புரிந்திட முடியாது) பெண்கள் ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை ஏற்படுத்தலாம். (பார்ப்பனியம் முதலிய வகுப்புத் துவேஷத்தை கிளறும் சேவையல்ல.)

காந்திஜி பெண்களுக்குச் செய்திருக்கும் உபதேசம் அருமையானது. தமிழ் தாய்மாரும் அதைப் பின்பற்றுவார்களேயானால், தமிழ் நாட்டில் இந்தக் காலித்தனங்களும், சுயநல ஆர்ப்பாட்டங்களும் நடைபெறுமா?

மெய்தான்; தமிழ் தாய்மாருக்கு அந்த உயர்ந்த நோக்கம் ஏற்பட வேண்டுமென்றே தமிழ் அன்னையை இரவு பகலாக வேண்டி வருகிறேன். தமிழ் தாய்மாருக்கு அந்த உயர்ந்த நல்ல அறிவு அதி சீக்கிரத்தில் ஏற்படுமென்பதே எனது திடமான நம்பிக்கை.

மெய்தான்; இந்த வீரத் தாய்மார்களைக் கடவுள் காப்பாற்றுவாராக. காந்திஜி எப்படி இருக்கிறார்?

காந்திஜி சுகமே இருக்கிறார். அவர் அதி சீக்கிரத்தில் பர்டோலி போவாரெனத் தெரிகிறது. வங்காளத்தில் காங்கிரஸ் கூட்டு மந்திரி சபை ஏற்படுத்துவது சம்பந்தமாக அவர் ராஷ்டிரபதி சுபாஷ் பாபுவைக் கலந்து ஆலோசித்தார். முடிவு என்னவென்பது தெரியவில்லை தமிழ் நாட்டுக்கு வரவிருந்த சுபாஷ் பாபு அவசரமாக வார்தா போனார் அவருக்கு அங்கு கடுமையான ஜுரம் கண்டது. ஆகவே தமிழ் நாட்டுக்கு வர முடியாது போயிற்று. அவர் தமிழ் நாடு யாத்திரையை ரத்து செய்து விட்டார். கல்கத்தாவுக்கு திரும்பிவிட்டார். சுபாஷ் பாபு பிறந்த இடம் வங்காளம். அங்கு காங்கிரஸ் மந்திரி சபை ஏற்படாதது சுபாஷ் பாபுவுக்கு அதிக வருத்தம். அவரே காங்கிரஸ் தலைவராக இருக்கிறார். அவருடைய ஆட்சி காலத்தில், எப்படியாவது வங்காளத்தில் காங்கிரஸ் கூட்டு மந்திரி சபை ஏற்படுத்திவிட வேண்டுமென்பது அவர் மனம் நிறைந்த ஆவல். அதற்காக தீவிரமாக வேலை செய்து வருகிறார். மேலும், ஜீவியத்தில் பெரும் பாகத்தை அவர் சிறையிலும், மேனாடுகளிலும் கழித்தார். சிறையிலிருக்கும்போது கடுமையான நோய்களுக்கு உள்ளானார். இதனால், அவருக்கு நீண்ட யாத்திரை செய்ய முடிவதில்லை. தமிழ் நாட்டுக்கு வர சுபாஷ் பாபு எவ்வளவோ முயற்சித்தும் முடியாது போயிற்று. தமிழருக்கு அவரைத் தரிசித்து, வரவேற்கும் பாக்கியம் கிடைக்கவில்லை. ராஜபாளையத்தில் நடைபெற்ற தமிழ் மகாநாட்டைக்கூட அவரால் ஆரம்பித்துவைக்க முடியாது போயிற்று. இது தமிழர் துரதிஷ்டமென்று தான் சொல்லவேண்டும். தமிழர் துரதிர்ஷ்டம் அவ்வளவு பெரிய நஷ்டமல்ல; சுயமரியாதைக்காரருக்கும், காங்கிரஸ் எதிரிகளுக்குந்தான் அதிக நஷ்டம். அவர்கள் சுபாஷ் பாபுவுக்குக் கருப்புக் கொடி பிடிக்கத் தயாராக இருந்தார்கள் பாவம்! அந்தக் கருப்புக் கொடிகளெல்லாம் ஏங்கிக் கண்ணீர்வடிக்கின்றனவாம்! அவைகளுக்கு ஆறுதல் சொல்ல, ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் ஒரு அனுதாபத் தீர்மானம் செய்ய உத்தேசித்திருப்பதாகக் கேள்வி.

அந்தச் சனியன்கள் எப்படியோ போகட்டும்; சமஸ்தானங்களின் பொறுப்பாட்சிப் போராட்டம் எந்த நிலைமையிலிருக்கிறது?

சமஸ்தானங்களில் பொறுப்பாட்சிப் போராட்டம் மும்முரமாகவே இருக்கிறது. நந்தகான், இந்தூர், தென்கனல், கோலாப்பூர், ராஜபிப்லா, சிதாமா, கட்ச், ராமதுர்க்கா முதலிய சமஸ்தானங்களில் போராட்டம் மும்முரமாக இருக்கிறது. ராஜ்கோட் போராட்டத்தில் சமஸ்தானக் காங்கிரசுக்கு வெற்றி. ராஜ்கோட் மன்னர் வழிக்கு வந்தார். சர்தார் படேலுடன் ஒரு சமாதானஞ் செய்திருக்கிறார். ராஜகோட் போராட்டம் இதர சமஸ்தானங்களுக்கு வழி காட்டி, வெற்றியளிக்குமென்பதில் சந்தேகமில்லை காந்திஜி ஜவாஹர்லால், சுபாஷ் பா முதலியோரின் போசனையின் பேரில் ஹைதராபாத் போராட்டத்தை நிறுத்தி வைத்திருக்கிறார்கள் ஹைதராபாத நிஜாம், சமஸ்தான மக்களுக்கு நியாயமான பொறுப்பாட்சி வழங்குவாரெனத் தெரிகிறது அதற்காக சர் அகபர் ஹைதாரி முயற்சியெடுத்து வருகிறார். திருவாங்கூரில் போராட்டம் மீண்டும் ஆரம்பித்து விட்டது பல தலைவர்களைக் கைது செய்திருக்கிறார்கள். திருவாங்கூர் காங்கிரஸ் காரியக் கமிட்டி, காந்திஜி தயாரித்து அனுப்பிய தீர்மானத்தை ஏற்றுக் கொண்டு, அதையே தீர்மானமாக நிறைவேற்றி, திவான் மீதுள்ள குற்றச் சாட்டுக்களை வாபஸ் செய்திருந்தும், திவான் அந்தத் தீர்மானங்களை இன்னமும் கவனிக்கவில்லை. தலைவர்களை விடுதலை செய்து, பொறுப்பாட்சிக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவில்லை. காந்திஜிகூட சர். சி. பி.யின் அசமர்த்தத்தைக் கண்டித்திருக்கிறார். சர். சி பி.க்கு இனிமேலாவது புத்திவருமென்று நினைக்கிறேன்." அவர் அடக்கு முறை வெறி இதற்குள் குளிர்ந்திருக்குமென்பதே என்னுடைய நம்பிக்கை கபூர்தலா மன்னர் அவர் பிரஜைகளுக்கு ஓரளவு சுதந்திரம் கொடுத்துவிட்டார். ராஜகோட் மன்னரைப்போல் திமிர் கொண்டு, அடக்கு முறையால் மக்களைக் கஷ்டப்படுத்தி இறுதியில் மண்ணைக் கவ்வி அவமானப்படுவதிலும், மன்னர்களாகவே சமஸ்தான பிரஜைகளுக்கு சுதந்திரம் கொடுத்து விடுவது பல வகைகளிலும் சிறந்ததல்லவா? சமஸ்தான கோபுரப் பொம்மைகளுக்கு இந்த நல்ல புத்தி எப்பொழுது ஏற்படுமோ தெரியவில்லை

சமஸ்தான மன்னர்களுக்குப் புத்திவரும் காலம் நெருங்கிவிட்டது. சமஸ்தான பிரஜைகள் விடுதலையடைவதும் நிச்சயம் அதற்குச் சந்தேகமே வேண்டாம் வேறு விசேஷங்கள் உண்டா?

மங்களூரில் கத்தோலிக்கக் கிறிஸ்துவர்கள் மகாநாடு ஒன்று நடந்தது காங்கிரஸ் மந்திரிகளை, விசேஷமாக சென்னை, பம்பாய் மந்திரிகளை அவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். கத்தோலிக்கக் கிறிஸ்துவர்கள் அனைவரும் தேசபக்தி என்ற புனிதமான தத்துவத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென மகா நாட்டுத் தலைவர் ஏ. ஸோரிஸ் பேசியிருக்கிறார் ஒரு கத்தோலிக் காரரான சர் ஏ டி. பன்னீர்செல்வம் என்ன செய்கிறார்? கத்தோலிக்க மதத்துக்கே பரம எதிரிகளான சு. ம. களுடன் சேர்ந்து கொண்டு கும்மாளம் போடுகிறார். மீசையை முறுக்கிக் காங்கிரஸ் மந்திரிகளை எதிர்க்கிறார் இந்த ஆர்ப்பாட்டமெல்லாம் எதற்கு? ஆதாயமில்லாமல் செட்டி ஆற்றோடு போவானா? லண்டனில் இந்திய மந்திரி காரியாலயத்தில் ஒரு இடம் காலியாக இருக்கிறது. சர். ஏ. ராமசாமி முதலியார் வகித்த இடமே அது அந்த இடத்தின் மீது சர் பன்னீர் செல்வம் திருஷ்டி விழுந்திருப்பதாகக் கேள்வி அவர் கவர்னருக்கு காவடி எடுத்ததாகவும் வதந்தி இந்தத் திருஷ்டியுடன் தான் சர் பன்னீர்செல்வம் தீவிரமாகக் காங்கிரசை எதிர்க்கும் புண்ணிய சேவையில் ஈடுபட்டிருப்பதாக ஒரு குருவி சொல்லுகிறது! காங்கிரஸ் எதிரிகளின் தீவிர தமிழ் பக்திக்கு இது ஒரு 'சாம்பில்'! இதைப் போலவே மற்றவர்களும். எல்லோரும் பதவிக்கும், பட்டத்துக்கும் வாய் திறக்கும் பரம பக்தர்கள்தான்! தமிழருக்கு இது நன்றாக ஞாபகமிருக்கட்டும்.

—: ஏஜண்டுகள் தேவை :—

எம். ஜி. ராஜன்ஸ் **பட்டணம் பொடி**

காரம், மணம், குணம், நிறம் ஒருங்கே அமைந்தது

எம். ஜி. ராஜன் அண்டு கம்பெனி, P.B.231 G P O. MADRAS (T)

மாஸ்கோ ஓங்குகிறது

ரஷியா சீர்கெடவில்லை

ரஷியாவில் ஜார் மன்னர் ஆட்சியை ஒழித்து, சோவியத் போல்ஷவிக் ஆட்சி ஏற்பட்ட காலமுதல், ஐரோப்பிய முதலாளிகள் தேசங்களெல்லாம் சோவியத் சர்க்காருக்கு விரோதமாக விஷமப் பிரசாரஞ் செய்து வந்தன. ரஷியா சீர்குலைந்து போய்விட்டது; அங்கு ஏழைகளுக்கு விமோசனமில்லை; ஏழைகள் வயிற்றுச் சோற்றுக்குத் திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள் என்றெல்லாம் பிரசாரஞ் செய்து வந்தார்கள். ஆனால், அந்த விஷமப் பிரசாரஞ் செல்லவில்லை. ரஷியா

ஹிட்லரும், ஸ்டாலினும் ஆனந்தக் கூத்தாடுகிறார்கள். ஆனால், ஒருவரை யொருவர் மடக்கத் தருணம் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இது சர்வாதிகாரிகளின் ராஜதந்திரம்.

ரஷியாவிலுள்ள ஏழைப் பெண். இப்பெண்ணுக்குச் சாப்பாட்டுக்குக் குறைவில்லை. அவளே உற்பத்தி செய்யும் காய் கறிகளை விற்று ஜீவனம் நடத்தி வருகிறாள். சோவியத் சர்க்கார் அதற்கு வழி செய்து கொடுத்திருக்கிறார்கள். ஜார் மன்னர் காலத்திலே இவ்வித ஏழைகள் உடுப்புக்கும், உணவுக்கும் மிக்க கஷ்டப்பட்டார்கள்.

சோவியத் ரஷியா சீர்குலைந்து விட்டது; அது இனிமேல் உருப்படாது என்று சொல்லிக் கொள்ளுகிறார்கள். ஆனால், சோவியத் ரஷியா சீர்குலைந்து விடவில்லை. அது முன்னிலும் பன் மடங்காக அபிவிருத்தியடைந்து வருகிறது. இதர ஐரோப்பிய தேசங்களெல்லாம் அதற்கு நடுங்கிக் கொண்டிருப்பது ஒன்றே அதற்குப் போதிய சான்றாகும்.

வில் ஏழைகளுக்கு அதிக நன்மை கிடைத்து வருகிறது. ரஷிய சர்க்கார் தீவிரமாக வேலை செய்து வருகிறார்கள். ஐந்து வருடத் திட்டம் போட்டுக் காடுகளையெல்லாம் செழிப்பான பிரதேசங்களாக்கினர். தொழிற் சாலைகள் மலிந்தன. ஏராளமான ஆயுத தளவாடங்களையும், இயந்திரங்களையும் உற்பத்தி செய்தனர். ராணுவத்தைத் திரட்டினர். இன்று ரஷியா, வேறு எந்த ஐரோப்பிய தேசத்தையும் விட அதிக ராணுவ பலம் பெற்றிருக்கிறது. இன்று ரஷியா யுத்தத்துக்குக் கிளம்புமேயானால், சுமார் $1\frac{1}{2}$ கோடி ராணுவங்களைத் திரட்டமுடியும். மேலும், ஆகாயப்படையில், ரஷிய விமானப்படைக்கு இணையாக வேறு எதையும் சொல்லமுடியாது. கைத்தொழிற்சாலைகளிலும், ரஷியாவுக்கு இணையாக வேறு எந்தத் தேசத்தையும் சொல்ல முடியாது. ரஷியாவின் அபிவிருத்தியை இப்பொழுதுதான் ஐரோப்பிய வல்லரசுகள் அறிய ஆரம்பித்திருக்கின்றன. பிரான்ஸ் ரஷியாவின் உதவியைத் தேட முன் வந்தது. பிரிட்டனுக்கு ரஷியாவைப் பற்றிப் பயமேற்பட்டிருக்கிறது. இன்று ரஷியாவுடன் அது ஒப்பந்தஞ் செய்துகொள்ளத் தயார். ஆனால், முதலாளிகளின் எதிர்ப்பு அதற்கு விரோதமாக இருக்கிறது. ஜெர்மனியும், இதாலியும் இன்று ரஷியாவைக் கண்டு நடுங்கக்கூடிய நிலைமைக்கு வந்துவிட்டன.

ஸ்டாலின் ஆட்சி

ஸ்டாலின் ரஷியாவில் கொடுங்கோல் ஆட்சி நடத்துவதாகக் கூறுகிறார்கள். ஸ்டாலின் கொடுங்கோல் ஆட்சி நடத்தியிருக்கலாம். ஆனால், ஹிட்லர், மூஸோலினி முதலிய சர்வாதிகாரிகள் நடத்திவரும் அவ்வளவு கொடுங்கோல் ஆட்சி ரஷியாவில் இல்லை. ரஷியாவில் சதிகாரர் மலிந்து

உலகத்தை தோற்கடிக்கும்

விட்டார்கள். ஜெர்மனி, இதாலிய தேசங்களின் வலையில் சிக்கிய சில ரஷியர், சோவியத் சர்க்காரை அழிக்கச் சூழ்ச்சி செய்தார்கள். அந்தச் சூழ்ச்சிகாரர்களை ஸ்டாலின் நசுக்கி வருகிறார். சமீபத்தில் யுக்ரேய்ன் பிரதேசத்தை ஜெர்மனிக்குக் கொடுக்கவும், யுக்ரேய்னில் புரட்சியை உண்டுபண்ணவும் சில ரஷிய ராணுவ வீரர்களும், வேறு சிலரும் அந்தரங்கமாக வேலை செய்து வந்தார்கள். இவர்கள் சூழ்ச்சியைக் கண்டு பிடித்து, அந்தச் சூழ்ச்சிக்காரர்களை ஸ்டாலின் ஈவு இரக்கமின்றித் தண்டித்தார். அவர்களை தூக்குப் போட்டார். ரஷியாவுக்கு விரோதமாகச் சதி செய



ரஷியப் பெண்கள் ஆடை ஆபரணங்கள் அணிவதிலும், காலங் கடத்துவதிலும் ஏற ஐரோப்பியப் பெண்களுக்கு இளைத்தவர்களல்ல. தக்க விக மேனாட்டு நாகரிகத்துக்கு ஏற்றவாறு ஆடைகள் தயாரிக்க சங்கங்கள்கூட ஏற்படுத்தியிருக்கிறார்கள். இவ்வளவு நாகரீகமும், முன்னேற்றமுமடைந்த ரஷியாவைத் [illegible] சீரழிந்து விட்டதாக இதர தேசங்கள் போய்ப் பிரசாரஞ் செய்கின்றன.

வோரை ஸ்டாலின் நசுக்கி வருகிறார். இது பாவமா? ஹிட்லரும் முஸோலினியும் இதைவிட கொடுமையான காரியங்கள் செய்யவில்லையா? அவர்கள் சர்வாதிகாரத்தை எதிர்த்தபெரிய ராஜதந்திரிகளையெல்லாம் அவர்கள் அழித்தார்கள். அந்தப் பெரியோர்களின் குடும்பங்களைக் கூட பூண்டோடு அறுத்து விட்டார்கள். இதைவிட கொடுமையான காரியங்களை ஸ்டாலின் செய்யவில்லையென்பது நிச்சயம்.

மாஸ்கோ

சோவியத் சர்க்காரின் தலைநகரம் மாஸ்கோ. சோவியத் சர்க்கார் பல முன்னேற்றங்களுக்கு மாஸ்கோ நகர் ஒன்றே போதிய சான்றாகும். மாஸ்கோ நகரை நேரில் கண்ட சோவியத் எதிரிகள்கூட சோவியத்

(அடுத்த பக்கம் பார்க்க)

ரஷியா பெரிய தேசம்; அதின் விஸ்தீரணத்தில் ஐரோப்பா, அமெரிக்கா முதலிய தேசங்களை அடக்கி விடலாம். ரஷியாவுக்குள் அடங்கியது யுக்ரேய்ன் பிரதேசம். அதை அபகரிக்க ஹிட்லர் தந்திரஞ் செய்கிறார்.

- மாஸ்கோ ஓங்குகிறது -

(முன் பக்கத் தொடர்ச்சி)

சர்க்காரின் முன்னேற்றங்களைப் புகழ்ந்திருக்கிறார்கள். சென்ற 20 வருடங்களில் மாஸ்கோ, ஒரு சிறு நகரமாயிருந்த மாஸ்கோ, இன்று பிரமாண்டமான நகரமாக விளங்குகிறது. அதின் ஜனத் தொகை 40 லக்ஷம். அங்கு ஒரு சில பள்ளிக் கூடங்களேயிருந்தன. இன்று 294 பள்ளிக் கூடங்களிருக்கின்றன. சோவியத் ஆட்சி ஏற்படுவதற்கு முன் மாஸ்கோநகரில் சுமார் 116000 ரஷிய சிறுவர் சிறுமிகளே கல்வி கற்று வந்தனர். இன்று, சுமார் $7\frac{1}{2}$ ரஷிய சிறுவர் சிறுமிகள் கல்வி கற்றுவருகின்றனர். 100க்கு 75 விதம் ரஷியர் கல்வி கற்க ஏற்பாடு செய்து வருகிறார்கள். சோவியத் சர்க்கார் ஆதிக்கத்துக்கு வந்த 20 வருடங்களில், ரசாயன அபிவிருத்தி அதிகமாகி இருக்கிறது. ரசாயன ஆராய்ச்சியை அபிவிருத்திசெய்ய சுமார் 10 பெரிய கட்டிடங்களைக்கட்டி, அங்கு ரசாயன ஆராய்ச்சி செய்ய ஏற்பாடுசெய்திருக்கிறார்கள். 62 கலாசாலைகளிருக்கின்றன. 17 கைத்தொழிற்சாலைகளும், 12 கைத்தொழில் கற்றுக் கொடுக்கும் கலாசாலைகளும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இன்னம் பல விதமான கைத்தொழில்களைக் கற்றுக்கொடுப்பதற்கென 438 கட்டிடங்கள் கட்டியிருக்கிறார்கள்.

ஆஸ்பத்திரிகள்

சோவியத் சர்க்கார் அதிகாரத்துக்கு வருமுன் மாஸ்கோ நகரில் சுமார் 33 சிறு ஆஸ்பத்திரிகளும், 8842 பேர் சிகிச்சை செய்யக்கூடிய படுக்கைகளுமே இருந்தன. 1937ம் வருடத்துக்குள் சோவியத் சர்க்கார் அந்த ஆஸ்பத்திரிகளைப் பெரியதாகக் கட்டி, சுமார் 20000 பேர் சிகிச்சை செய்ய வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றனர். இது போக சுமார் 3780 பெண்கள் பிரசவிக்கக்கூடிய பெரிய ஆஸ்பத்திரிகளும் கட்டியிருக்கின்றனர். ஏராளமான பார்க்குகளும், கிளப்புகளும் ஏற்படுத்திருக்கிறார்கள். சினிமா தியேட்டர்களும், நாடகக் கொட்டகைகளும் ஏராளமாக உண்டு. ஆஸ்பத்திரிகளிலோ, அல்லது, பார்க், தியேட்டர்களிலோ பணக்காரர் ஏழைகள் என்ற வித்தியாசமே கிடையாது.

ஏழைகளுக்கு உபகாரம்

மாஸ்கோ நகரிலுள்ள சுமார் 40 லக்ஷம் பேர்களில் தினந்தோறும், சுமார் 22 லக்ஷம் பேர் தொழிற்சாலைகளில் வேலை செய்யப் போகிறார்கள். தினசரி சுமார் 5 கோடி ரூபாய் பெறுமான சரக்குகள் உற்பத்திசெய்து வருகின்றனர். தினசரி சுமார் $3\frac{1}{2}$ கோடி ரூபில் சாமான்கள் மாஸ்கோ நகரிலேயே விற்பனையாகி வருகின்றன. டிராம், பஸ், ரயில்வேக்களில் சுமார் 60 லக்ஷம் ஜனங்கள் யாத்திரை செய்கின்றனர். ரயில்வேக்களில் மட்டும் சுமார் 20000 ஜனங்கள் போய் வந்து கொண்டிருக்கின்றனர். வெளியூர்களிலிருந்து மாஸ்கோவுக்கு வந்து போகிறவர்கள் சுமார் 5 லக்ஷம் பேர்கள். 10 லக்ஷம் தினசரி கலாசாலைகளுக்குப் போய் வருகிறார்கள். ஹைஸ்கூல்களில் சுமார் 6 லக்ஷம் மாணவர் படிக்கிறார்கள். கைத் தொழிற்சாலைகளிலும், சிலர் பாடசாலைகளிலும் இன்னம் ஏராள மாணவர் படித்து வருகின்றனர். வயது சென்றவர்கள் பலருக்குப் பள்ளிக்கூடங்களிருக்கின்றன. அந்தப் பள்ளிக்கூடங்களில் மட்டும் சுமார் 50,000 பேர் படித்து வருகின்றனர். கைத்தொழிற்சாலைகளில் வேலை செய்யப் பயிற்சி பெறுகிறவர்களுக்குப் பல பள்ளிக்கூடங்களிருக்கின்றன. அவற்றில் சுமார் 22 000 சிறுவர் சிறுமியர் கல்வி கற்று வருகிறார்கள். தினசரி சுமார் $7\frac{1}{2}$ லக்ஷம் கடிதங்கள் மாஸ்கோ நகருக்கு வருகின்றன. 68,000 தந்திகள் வந்து குவிகின்றன. தினசரி சுமார் 90 லக்ஷம் தினசரி பத்திரிகைகள் செலவாகின்றன. 72 பாஷைகளில் வெளியாகும், சுமார் 15 லக்ஷம் புஸ்தகங்கள் செலவாகின்றன. தினசரி மாஸ்கோ நகரில் மாற்றங்களையும், சீர்திருத்தங்களையும் காணலாம். ரஷியாவின் முன்னேற்றத்துக்கு மாஸ்கோ நகர் ஒன்றை உதாரணமாக இங்கு எடுத்துக் காட்டியிருக்கிறது. இதிலிருந்து ரஷியாவின் முற்போக்கைத் தெரிந்து கொள்ளலாம். ரஷிய விரோதிகள் விஷப் பிரசாரஞ் செய்வதுபோல் ரஷியா சீர்குலைந்து இருக்கவில்லை. அங்கு ஏழைகளும் பணக்காரரும் சுகமே இருக்கிறார்கள். ஏழைகளுக்கும் சிறுபான்மை வகுப்பினரான யூதர் ஜெர்மானியர், பிரஞ்சுக்காரர் எல்லோரும் சம உரிமை பெற்று, அவர்கள் ஜீவியத்தை சுகமே நடத்தி வருகின்றனர்.



மணத்திலும் குணத்திலும் சிறந்தது
நீபா
(வேப்பம், நீம், மார்கோஸா)
சோப்
GANGA WORKS. ADYAR. MADRAS.
நெ. 1-64, தங்கசாலை தெரு, பி. டி. மதராஸ் (ஏஜண்டுகள் தேவை

தமிழ்ச் சட்ட புஸ்தகங்கள்

	ரூ.	அ.
ஸ்டாம்பு, ரெஜிஸ்டர் பல வித பத்திரங்கள் எழுதும் மாதிரியுடன் விவகார சிந்தாமணி ...	2	8
உயில், பாகம், வார்சு பாத்தியம், ஸ்திரீ தன முதலியதுள்ள பெரிய ஹிந்துலா	2	0
சீவில் விவகாரம் பூர்த்தியாயடங்கிய சீவில்லா	3	0
போலீஸ் மாஜிஸ்ட்ரேட் சம்பந்தமான கிரிமினல் லா	3	0
விவாக வயது சட்டம்	1	0
புது கிராம முனிசீப் சட்டம்	1	8
கிராம சுகாதாரம்	0	2
கிராம பஞ்சாயத்து கோர்ட் சட்டம்	1	4
கிராம கர்ணம் மானுயல்	1	4
லோகல் போர்ட் ஆக்ட்	2	0
குற்ற சம்பந்தமான இந்தியன் பினல் கோட்	3	0
எவிடன்ஸ் (சாட்சி) ஆக்ட்	1	0
ஹிந்து தர்ம ஸ்தாபன (தேவஸ்தான) சட்டம்	1	0
டிரஸ்ட்டி ஆக்ட்	0	12
நில ஆக்கிரமிப்பு சட்டம்	0	4
கால நிர்ணய ஆக்ட்	0	8
புதிய ஸ்டாம்பு ஆக்ட்	0	12
புதிய ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்ட்	0	10
பரம்பரை கிராம உத்தியோக ஆக்ட்	1	0
புது இன்கம்டாக்ஸ் சட்டம்	1	0
பெரிய மகம்மதியன் லா	2	0
எஸ்டேட் ஜமீன்குடி நில சட்டம்	1	4

V. S. T. Sawmy & Co.,
VEPERY, MADRAS.

புது வருடத்திய சன்மான கேக்குகள்

ஐரோப்பியர் மேல்பார்வையில், மிக சுத்தமான முறையில் எங்களுடைய மின்சார பேக்கரியில் தயாரிக்கப்பட்டது. சிறந்த பழ வகைகளையும், வாசனைச் சரக்குகளையுமே உபயோகித்து வருவதோடு, ஒவ்வொரு கேக்கிலும் நல்ல விதமான "மார்ஜிபான்" சேர்த்துத் தயாரிக்கப்பட்டிருக்கிறது. படத்தில் காட்டியபடி மனதைக் கவரும் அழகான சித்திர வேலைப்பாடுகளடங்கியது.

வெளியூர் ஆர்டர்கள் சம்பந்தப்பட்டவரையில் விசேஷ சிரத்தை எடுத்து வருகிறோம்.

ராத்தல் ஒன்றுக்கு விலை ரூபா 2.

பெரிய கேக் வேண்டியவர்கள் உடனே ஆர்டர் கொடுங்கள்.

ஸ்பென்சர் மின்சார பேக்கரி,

"இந்திரா"
ஆர்ட் ரெகுலேட்டர்
அழகிலும், அமைப்பிலும்,
உயர்ந்த கேடியாரம்
15 வருடங்களுக்கு உத்தரவாதம்



ஒரு வாரத்துக்குச் சாவி கொடுக்காமலேயே ஒழுங்காக ஓடிக் கொண்டிருக்கும். ஒரு மணி, அரை மணி நேரம் அடித்துக் காட்டும் இன்பமான மணியோசை. வெள்ளி எழுமல் டையல், தெளிவான உயர்ந்த, கண்ணாடிகளுடன் கூடியது. பளபளப்பான பித்தளை வேலைப்பாடுகளுடன் கண்களை பறிக்கும் அழகு.

சிறியது ரூ. 20. நடுத்தரமானது ரூ. 25
பெரியது ரூ. 30.

பாக்கிங், முதலிய இதர சிலவுகள் வேறு. ஆர்டர் செய்கிறவர்கள் தயவு செய்து ரூபாய் 5 அட்வான்ஸாக அனுப்பவேண்டும்.

ஜலால் அண்டு சன்ஸ்.,
கவர்ன்மெண்ட் அண்டு ரயில்வே சப்ளையர்ஸ்,
46, ரட்டன் பஜார், சென்னை.
—: பிராஞ்சு :—
மவுண்ட்ரோட், சென்னை.
அபீட்ரோட் ஹைதராபாத், டெக்கான்

உங்களுக்குத் தெரியுமா?

ஏழு மாப்பிள்ளை!

பல்கேரியாவில் ஒரு பெண்ணுக்கு வயது 19தான். இந்த வயதுக்குள் அவள் 7 மாப்பிள்ளைகளை மணந்துவிட்டாள். இவர்களில் சிலர் இறந்துபோனார்கள். வேறு சிலர் இவளை, விவாகரத்து செய்து கொண்டார்கள். இப்போது அவள் 8-வது மாப்பிள்ளையை மணந்து கொள்ள விருக்கிறாள். மகள் மணந்து கொள்ளுவது தகப்பனருக்குப் பிடிக்கவில்லை. ஏனென்றால், மகளின் ஜீவியத்தைக் கொண்டு அவர் காலங் கடத்தி வருகிறவர். ஆகவே, அவர் மகள் மணந்துகொள்ளவிருக்கும் மாப்பிள்ளையை வீட்டுக்கு வரவிடாமல் தடுக்க வேலை செய்தார். மகள் தகப்பனை வெறுத்துத் தள்ளிவிட்டு வேறு இடத்திற்குக் குடி போயிருக்கிறாள். அவள் சீக்கிரத்தில் 8-வது மணஞ் செய்துகொள்ளுவாளென்பது நிச்சயம். தகப்பன் பாடுதான் பரம சங்கடமான நிலைமையில் வந்திருக்கிறது.

இருதய மில்லாத பெண்!

லண்டனில் மாக்கரிட்டா பெர்னல் என்னும் ஒரு பெண் இருக்கிறாள். அவளுக்கு இருதயமே கிடையாது. அவள் ஒரு வீட்டில் வேலை செய்து வந்தாள். ஒரு நாள் திடீரெனக் கால் சறுக்கி விழுந்தாள். அவள் கையிலிருந்த கத்தி அவள் இருதயத்தில் பாய்ந்தது. உடனே அவளை ஆஸ்பத்திரிக்கு எடுத்துக் கொண்டு போனார்கள். அவள் அதிர்ஷ்டம், அவளை ஆப்ரேஷன் செய்த டாக்டர் மிகக் கெட்டிக்காரர். கத்தியையும் இருதயத்தையும் எடுத்து விட்டார். சிறிது நேரத்தில் அப்பெண் மூர்ச்சை தெளிந்து எழுந்தாள். அவள் உயிருக்கு ஆபத்தில்லை. இருதயம் இல்லாமலேயே அவள் இரத்த ஓட்டம் இருந்து கொண்டிருக்கிறது. இன்றைக்கும் உயிருடனிருக்கிறாள். முன்போல் வேலை செய்து ஜீவியம் நடத்தி வருகிறாள்.

வெடி குண்டு புகை

இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற மேனாடுகளில் அடிக்கடி பனிப் பெய்வதுண்டு. இந்தப் பனி செடி கொடிகளை நாசஞ் செய்துவிடும். இந்தப் பனியைத் தடுக்கப் பிரான்சில் ஒரு ரசாயன நிபுணர் ஒருவித வெடிகுண்டு கண்டுபிடித்திருக்கிறார். அந்த வெடிகுண்டு எறிந்தால் போதும்; சுமார் 30 அடி உயரத்தில் 20, ஏக்கர் விஸ்தீரணத்தில் ஒருவித புகை பரவி நிற்கிறது. பனிப் பெய்து, செடிகளை நாசஞ் செய்துவிடாமல் பனியைத் தடுத்துவிடுகிறது. ஆகவே, பிரான்சிலுள்ள பெரிய திராட்சைத் தோட்ட முதலாளிகள் இந்த வெடிகுண்டுகளை உபயோகித்து வருகிறார்கள். ஒரு வெடிகுண்டின் கிரயம் 3 பவுன் 12 ஷில்லிங். இந்தப் புகையில் பெரும்பாலும் கெந்தகம் கலந்திருப்பதால் இதனால் திராட்சைச் செடிகளும் நன்றாக வளர்கின்றன. அந்தச் செடிகளில் காய்க்கும் திராட்சைப் பழங்களுக்கும் நல்ல குணம் கொடுக்கும் சக்தி ஏற்படுகிறது.

வைரத் திருடர்கள்!

தென்னாப்ரிக்காவில் தான் ஏராளமாக வைர சுரங்கங்களுண்டு. அந்த வைர சுரங்கங்களில் வேலை செய்பவர்கள் நல்ல வைரங்களைத் திருடிக் கொள்ளுவது சகஜம். வைரங்களை வாயில் போட்டு விழுங்கி விடுகிறார்கள். வேறு சிலர் தேகத்தை வெட்டி காயத்தினுள் வைரத்தை வைத்துத் தைத்து விடுகிறார்கள். இந்தத் திருட்டைக் கண்டு பிடிக்க ஒருவித எக்ஸ்-ரே முறையை வைர சுரங்க முதலாளிகள் கண்டு பிடித்திருக்கின்றனர். சுரங்கங்களில் வேலை முடிந்ததும் வேலையாட்கள் வெளியில் வரும்போது அவர்களை எக்ஸ்-ரே மூலம் பரிசோதிக்கின்றனர். வயிற்றினுள், அல்லது, தேகத்தின் எந்தப் பாகத்திலாவது வைரங்களிருந்தால், உடனே எக்ஸ்-ரே ஒளி நீல நிறத்தில் பிரகாசிக்கிறது. இந்த முறையைக் கண்டு திருடனைக் கண்டு பிடித்து வருகிறார்கள்.

முத்தத்துக்கு ஆபத்து!

அன்பின் அறிகுறி முத்தம். மேனாடுகளில் தான் முத்தங்கொடுக்கும் வழக்கம் அதிகம். அங்கு இந்த வழக்கம் அதிகரித்துவிட்டதால் இப்போது வெறுப்பும் அதிகரித்து விட்டது. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷம் என்பது சரியாய்ப் போய்விட்டது. முத்தம் கொடுப்பதால் நோய் பரவுவதாக டாக்டர்கள் அபிப்ராயப்படுகின்றனர். ஒரு முத்தத்தால் சுமார் 40,000 சிறு கிருமிகள் ஒருவரிடமிருந்து மற்றவருக்குப் பரவுகிறதாம். ஆகவே, முத்தம் கொடுக்கும் வழக்கத்தைத் தடுக்கக் கடுமையான சட்டம் போட்டிருக்கிறார்கள். பகிரங்கமாக, அதாவது, ரயில்வே ஸ்டேஷன், பார்க்குகள் முதலிய இடங்களில் முத்தம் கொடுத்தால் 3 மாத சிறைத் தண்டனை. இதாலியில் இச்சட்டம் அமுலுக்கு வந்து விட்டது. அமெரிக்கா, பிரான்ஸ், ஆஸ்திரியா, ரஷியா முதலிய இடங்களில் முத்த எதிர்ப்புச் சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. முத்தம் கொடுக்கும் வழக்கத்தை ஜப்பான், சீனா முதலிய இடங்களில் வெறுக்கின்றனர். சினிமாக்களில் சீனப் பெண்கள் முத்தம் கொடுக்கும் பாகத்தை நடிக்க மறுத்து விடுகிறார்களாம்!

T. Kuppuswamy Naidu,
OPTICIAN

128 & 121, Moor Market, Madras.
PLEASE PAY US A VISIT.

மாதங்கள் வேண்டாம் நாட்களும் வேண்டாம்.
ஒரே ஒரு மணி நேரத்தில்
வீரிய ஸ்தம்பனம் ஏற்பட
ரமண விலாசினி வடிகா
உபயோகியுங்கள்.
ஒரு டப்பி விலை ரூபா 1—0—0
மதனமஞ்சரி பார்மஸி,
1-94, சைனாபஜார், மதராஸ்.

விலை ரூபா 1-0-0

மற்றெல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

கர்ப்ப சஞ்சீவி எண்ணை

ஸ்திரிகளுக்கு மாதாந்தரத்தில் வரும் பொறுக்க முடியாத வயிற்று வலியை அந்த க்ஷணமே நிறுத்தும். சூதக க்ஷயம், சூதக சூலை, சூதக ஜுரம், சூதக வாய்வு, சூதக கட்டு, சூதகச் சிக்கல், சூதகத் திரவம், சூதகக் கட்டினால் உண்டாகும் தலைவலி, உடம்பு வலி, கைகால் பொருத்துகள், உள்ளங்கால் மேலெல்லாம் குத்து, குடைச்சல், உடம்பு க்ஷீணித்துப் போதல், வயிறு பெருத்தல், காந்தல் எழுந்திருக்க முடியாமை, திகைப்பு, மூர்ச்சை, மயக்கம், பசியின்மை, சாப்பாட்டில் வெறுப்பு, ஒரு செம்பு ஜலம்கூட தூக்க முடியாத பலவீனம், சூதக ஜன்னி முதலிய வியாதிகளையெல்லாம் தீர்த்து கர்ப்பப்பையை சுத்திகரிப்பட்டு, கர்ப்ப உற்பத்தியை உண்டுபண்ணும். கர்ப்பம் தரிக்க 6 வித மலடு தீரும். கர்ப்பம் தரிக்கவிடாது பண்ணும் கிருமிகளை கட்டுடன் வெளியில் அகற்றிவிடும். இடசாஸ்திரமும் பூரண ஆயுளுமுள்ள குழந்தை தரிக்கும்.

கபகுக்கு 3 புட்டி வேண்டும். இந்த பேப்பரைக் குறித்து எழுதவும்.
1 புட்டி ரூ. 2. 3 புட்டி 5-ரூ. செலவு வேறு.

குணம் இல்லாவிடில் ரூ. 5. வாபஸ்

R. M. K. சிவசுப்ரமண்யம்
சித்த வைத்தியசாலை பழனி. S. I.
பிராஞ்சு:—16, திருவல்லிக்கேணி ஹைரோடு, சென்னை.



சினிமா நடிகர்களில் பிரசித்தி பெற்ற பேபி ஜூன் என்பவள் அருமையாக ஒரு நத்தையை வளர்த்து வருகிறாள். அவள் வெளியில் செல்லுவதாயிருந்தால், அந்த நத்தையைக் கைக் கெடியாரம் போல் கையில் தரித்துக் கொண்டு போகிறாள்; நத்தையும் அவளிடம் ரொம்ப விசுவாசமாக இருக்கிறது அவள் கூப்பிட்ட உடனே அவளை நோக்கி ஊர்ந்து வருகிறது. நத்தையை அருமையாக வளர்த்தவர்கள் உலகிலேயே இவள் ஒருவள் தான்

* * *

இன்று ஒரு கோப்பை தேத் தண்ணீர் முக்கால் அணா இங்கிலாந்து போன்ற அந்நிய தேசங்களில் அது ஒரு பென்ஸ். ஆனால், 1839ம் வருடம் இந்திய தேயிலை முதன் முதலில் இங்கிலாந்தில் இறங்கியபோது ஒரு கப் தேத் தண்ணீர் 10 பவுன் வீதம் விற்று வந்தார்களாம். ஏழைகள் தேத் தண்ணீர் சாப்பிட முடியாது. பெரிய பணக்காரர் தான் தேத் தண்ணீர் சாப்பிட முடியும். இன்று தேத் தண்ணீர் சாப்பிடாத குடும்பமே அங்கு கிடையாது.

* * *

சுமார் 2000 வருடங்களுக்கு முன் சீனர் ஒருவித விஷம் செய்யக் கண்டு பிடித்திருந்தார்கள் அந்த விஷத்தைத் தவளையின் தோலிலிருந்து செய்தனர். விஷத்தை யாருக்காவது கொடுத்தால் மரணம் நிச்சயம். இறந்தவர் எப்படி இறந்தார், என்ன விஷம் கொடுக்கப்பட்டதென்பதை எவராலும் கண்டுபிடிக்க முடியாது. ஆனால், விஷம் செய்யும் அந்த முறையைச் சீனர் மறந்து விட்டார்கள். அந்த முறையை மெல்போர்னிலுள்ள ஒரு ரசாயன நிபுணர் இப்போது கண்டுபிடித்திருக்கிறார்.

* * *

கொண்டால் மகாராஜா சிம்மசனம் ஏறியபோது அவரை ஒரு தராசில் வைத்து நிறுத்து, அவர் நிறைக்குத் தகுந்த பொன்னை, தானஞ் செய்தார். அவர் நிறைக்குத் தகுந்த தங்கத்தின் மதிப்பு 15,000 பவுன். அவ்வளவு தொகையையும் ஏழைகளுக்குப் பங்கிட்டுக் கொடுத்தார்.

* * *

ஜாவா தீவிலுள்ள சோலோ என்னும் நிஜின் சுல்தான் அரண்மனையில் சுமார் 15000 பேர் வேலை இருக்கிறார்கள். இவர்களில் பெரும்பாலோர் சுல்தானின் மனைவிகள்; நடனப் பெண்கள், பக்கிரிகளும், சோல்ஜர்களும்

லண்டன் ஹோட்டல்களில் நத்தையைப் பிரியமாகச் சாப்பிடுகிறார்கள். வருடமொன்றுக்குச் சுமார் 2 கோடி நத்தை லண்டன் ஹோட்டல்களுக்கு மட்டும் செலவாகிறது.

* * *

இன்று சமுத்திரங்களில் ஓடிக் கொண்டிருக்கும் சுமார் 10,000 வர்த்தகக் கப்பல்களில் 50 கப்பல்களே மணிக்கு 20 மைலுக்கு அதிகமான வேகத்தில் ஓடுகின்றன. சுமார் 20 கப்பல்களே 30,000 டன்னுக்கு அதிகமான நிறையுள்ளவை

* * *

ஆஸ்திரேலியாவில் ஒருவித "வேட்டை நாய்" எலும்புகளிருக்கின்றன. இந்த எலும்புகளுக்குச் சண்டை செய்வதென்றால் அதிக விருப்பம். ஒரு எலும்பை இரண்டாக வெட்டினால்கூட, அந்த எலும்பின் தலை வாலுடன் சண்டை போடுமாம்!

* * *

செயின்ட் லூயிஸ் என்னுமிடத்தில் 15 வயதுள்ள ஒரு சிறுவன் ஒருவனிருக்கிறான். அவன் பெயர் பாப்வாட்லோ. வயது 15 தான், என்றாலும் அவன் உயரம் 8 அடி. 212 ராத்தல் நிறை இருக்கிறான். அவன் நடந்து வந்தால் ஒரு சிறு குன்று நகர்ந்து வருவதுபோலிருக்கும் ஆதலால் அவனுக்குச் "சிறு மலை" என்று ஆங்கிலத்தில் பெயர் வைத்திருக்கிறார்கள். நல்ல பொருத்தமான பெயர்தான்!

* * *

இங்கிலாந்தில், லெய்செஸ்ட்டர் என்னுமிடத்திலுள்ள லோர்வைல் என்னும் ஊரில் ஒரு குடும்பம் வசித்து வருகிறது. தகப்பனருக்கு 94 வயது. அவருடைய இரு குமாரர்களுக்கும், 70, 68 வயது. இரு குமாரத்திகளுக்கும் 72, 67 வயது இவர்கள் எல்லோரும் வேலை செய்து, வேலையைவிட்டு பென்சன் பெற்று நிம்மதியாகக் காலத்தைக் கடத்திவருகிறார்கள்.

* * *

சிங்கங்களைப் பழக்குவது சம்பந்தமாக அமெரிக்காவில் ஒரு பள்ளிக்கூடமிருக்கிறது தபால் மூலமாக கூட அவர்கள் சிங்கங்களைப் பழக்கக் கற்றுக் கொடுத்து வருகிறார்கள்.

* * *

இங்கிலாந்தில் டெர்பிஷையர் என்னுமிடத்துக்குச் சமீபத்தில் ஒரு கிராமம் இருக்கிறது. அந்தக் கிராமத்தில் ஒரு பெரிய தோட்டமும் வயல்களுமிருக்கின்றன. தோட்டத்தில் ஒரு பழைய மண்டையோடு கிடக்கிறது. அந்த மண்டையோட்டை யாரும் தொடுவதே கிடையாது. தப்பித் தவறித் தொட்டு விட்டால் நிச்சயம் அனர்த்தந்தான். ஒரு முறை யாரோ ஒருவர் தெரியாமல் தொட்டு விட்டார் தோட்டத்திலுள்ள குடிசைகளெல்லாம் தீக்கிரையாகி நாசமாயின மற்றொரு முறை ஒருவர் அந்த மண்டை வோட்டைத் தொட்டார் விளைவு இல்லாமல் தீய்ந்து போயின இவ்வாறு அதைத் தொட்டால் ஏதேனும் நஷ்டம் ஏற்பட்டுக் கொண்டேயிருக்கிறது. ஆகவே, அதை எவரும் தொடுவதே இல்லை. அது யாருடைய மண்டையோடு என்பதும் தெரியவில்லை.

* * *

யானைகள் சாதாரணமாக நடந்து சென்றால் மணிக்கு 50 மைல் வேகத்தில் செல்லுமாம். பெரும்பாலும் அவை இரவு காலத்தில் தான் வேகமாக நடந்து செல்ல விரும்புகின்றன. அவை இதே வேகத்தில் நெடுநாள் நடந்து செல்ல முடியாது. காரணம் அவைகளின் தடித்த தேகமேயாகும்.

ஷாக்புரூப் லிவர் கைக்கடிகாரம்



எந்தவித தொழிலாளரும் இதை உபயோகப் படுத்தலாம். மிகவும் உறுதியான மிஷின். ஏதோ கை தவறுதலாக கீழே விழுந்தபோதிலும் கடிகாரத்திற்கு ஒருவிதமான அபாயமும் ஏற்படாது. மிகவும் குறைந்த விலை இரண்டு வருஷ உத்திரவாதத்துடன் லிவர் ரவுண்டு கிளாஸ் ரவுண்டு கேஸ் கடிகாரத்தின் விலை ரூ. 3-15-0 ரவுண்டு கிளாஸ் சதுர கேஸ் கடிகாரம் விலை ரூ. 4-12-0 சதுர கிளாஸ் சதுர கேஸ் கடிகாரம் விலை ரூ. 7-8-0



ஹெட் ஆபீஸ்:—
ஸ்டார் வாச் கம்பெனி, மூர்மார்க்கட் சென்னை.
கவர்ன்மெண்ட் அண்டு ரயில்வே சப்ளையர்ஸ்,

வற்றா பொக்கிஷம்

தேக அசதி, மலச் சிக்கல், ஞாபகக் குறைவு, நரம்புகளின் தளர்ச்சி, மூத்திர சம்பந்தமான வியாதிகளால் கஷ்டப்பட்ட இலட்சக்கணக்கான ஜனங்களை எங்களுடைய உலகப் பிரசித்தி பெற்ற

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

காப்பாற்றி வந்திருக்கின்றன. சென்ற 57 வருஷங்களாக நாங்கள் கேட்காமலே வந்து குவிகின்ற நற்சாக்ஷிப் பத்திரங்களே மேற்படி மாத்திரைகள் குணங்கொடுப்பதில் குன்றாத பொக்கிஷமென்பதை நிரூபிக்கின்றன.

நீங்களும் உபயோகித்து
குணத்தையடையுங்கள்.
32 மாத்திரைகளடங்கிய
டப்பி 1-க்கு ரூ. 1—0—0
இனாம்! போஜன விதிகள் இனாம்!!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26 பிராட்வே, மதராஸ்.

பெருங்காயத்தில் சிறந்தது

N. K. S.

பெருங்காயம் தான்
ஒரு முறை பரீக்ஷித்தால்
உண்மை விளங்கும்.
காரன்தாஸ் கேதுர்தாஸ்
அன் சன்ஸ்
பெருங்காய வியாபாரிகள்
1-204, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு
ஜி. டி. மதராஸ்
தலைமை ஆபீஸ்: "வடகாதி" பாம்பே-2
கிளை ஆபீஸ்:—
கும்பகோணம்.



M. A. CHARI & CO.,
Ophthalmic Opticians,
9-9, BROADWAY, MADRAS.

ஆனந்தம் * மனோ உற்சாகம்

உடையவர்களாயிருக்கவேண்டு மாகில் நீங்கள் எல். ஜி. பெருங்கா யத்தையே வாங்கி உபயோகியுங்கள். லட்சக்கணக்கான மக்கள் அதன் அருமையை அறிந்து அதையே வாங்கி உபயோகிக்கிறார்கள்.

எல். ஜி.

பெருங்காயமானது

எல்லா பெருங்காயங்களிலும் தலை சிறந்தது
நீங்கள் பெருங்காயம் வாங்கும்போது
எல். ஜி. மார்க் போட்டிருக்கிறதாவென்பதைக்
கவனித்து வாங்குங்கள்
போலிகளைக்கண்டு ஏமாறுதீர்கள்

லால்ஜி கோது அன் கோ,

சௌகார் பேட்டை, மதராஸ்.

பிரபல வைத்தியாசிரியர் சென்னை விஜயம்!

பழனி, மலையப்பசாமி வைத்தியசாலையின் பிரதான வைத்தியரும், புரொப்ரைட்டரும், சித்தன் ஆசிரியருமான டாக்டர். சி. பி. சாமி தமது பிரஞ்சில் 1-1-39 முதல் 7-1-1939 முடிய 7 நாட்கள் தங்கியிருப்பார் வைத்திய உதவி கோரும் நண்பர்கள் டி யாரை கீழ்கண்ட இடத்தில் சந்தித்து குறைகளைத் தெரிவித்து, சிகிச்சை பெற இதுவே அறிய சந்தர்ப்பம்.

நோயாளர்களுக்கு இலவச ஆலோசனை கூறப்படும்.

மலையப்பசாமி வைத்தியசாலை,
1-54, அருணாசல நாயக்கன் தெரு,
சிந்தாத்திரிப்பேட்டை, மதராஸ்.

ஜண்டு



கேசரி ஜீவன்

தாதுவிருத்தியைக்
கொடுக்கும்
சிரேஷ்டமான டானிக்
ஜண்டு, அலோபதிக் ஆயுர்வேதிக்
மருந்துகள்
கீழ்க்கண்ட எமது தமிழ் நாடு
சப் ஏஜண்டுகளுடமிருந்து
கிடைக்கும்
தமிழ் நாட்டில் சப் ஏஜண்டுகள்

மதுரை:—டி என். சி. நாகலிங்கம் பிள்ளை, வடசித்திரை தெரு.
திருச்சி:—எஸ். வைத்யா அண்டு கம்பெனி, விநாயகர் மெடிகல்ஹால்
புதுக்கோட்டை:—அண்ணா கெமிஸ்ட்ஸ்.
காரைக்குடி:—கணேசா மெடிகல்ஹால்.
கும்பகோணம்:—டாக்டர் எஸ். கோவிந்தசாமி நாயுடு.
திருச்சலூர்:—பி. வி. முத்துகிருஷ்ண ராஜா.
கடலூர்:—ஸ்ரீராம பார்மஸி, புதுப்பாளையம்.

or. From Madras Presidency Agents

Damoder & Co, 78, China Bazaar Road, Madras.

சுதந்திர வீரன் சுபாஷ் சந்திர போஸ்

ஜீவிய சரித்திரம்

இந்திய நாட்டின் இளஞ் சிங்கம் சுபாஷ் சந்திர போஸின் ஜீவிய சரித்திரம். சுபாஷ் போஸின் வீர வாழ்க்கையையும், தியாக புத்தியையும், சீரிய குணத்தையும் இந் நூலில் விரிவாகக் காணலாம். ஒவ்வொரு தமிழனும் இதை வாசித்துப் பயன் பெறுவார்களாக.

புத்தகம் 1 க்கு விலை அணு 4.

5 அணு ஸ்டாம்பு அனுப்பினால் புத்தகம் அனுப்பப்படும்

மலாய் நாட்டிலுள்ளவர்களும், மற்ற அந்நிய நாட்டிலுள்ளவர்களும் 0—8—6 ஸ்டாம்பு அனுப்பிவைத்தால் புத்தகம் அனுப்பி வைக்கப்படும்.

மானேஜர், “தமிழ்மணி”

ஸ்தாபிதம், 1914 டெலிபோன் நெம்பர் 2224
புராதீன இரும்புபெட்டி தொழிற்சாலை சுற்பத்தியாளரும், கூடராஜன் [illegible] ஒர்க்ஸ் சொந்தக்காரருமான

பி. நடேச முதலியார்.

உயர்தர இரும்பு பெட்டிகள், பீரோக்கள், அரிசி அல்லர்கள், மாவு மில்கள், சீயக்காய் மில்கள், இதற்கு வேண்டிய தனி சாமான்கள் இதர மிஷனெரி சாமான்களும் தயாரித்து சப்ளை செய்பவர்.

59. பிராட்வே மதராஸ்.

இனாம்! மிகவும் ஆச்சரியம்!! இனாம்!!!

குணமில்லை என்று நிரூபிப்பவர்களுக்கு
பணம் உடனே வாபீஸ்

“கமலாஸ் காந்தாமிருதம்”

நீங்கள் என்றுமழியாத இளமை பருவத்தை அடைய வேண்டுமானால்
எங்கள் கமலாஸ் காந்தாமிருதத்தை சாப்பிட்டு ஆனந்தமடையுங்கள்

வாலிபக்கிழவர்களைக் குமரனாக்கும் என்பதற்கு ஏதாவது சந்தேகமுண்டா? இது காதலருக்கு இன்பந்தரும் லேகியம் போகானந்தத்தை விரும்பும் பூமான்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த அமிர்தம் மனிதரின் பாலிய சேஷ்டையாலும் ரத்தப்போக்காலும் நாடிகள் தளர்ந்து உடகாரவும் எழுந்திரிக்கவும் சக்தியற்றவர்களுக்கு சுறு சுறுப்பையும் ஆண்மையையும் வேண்டுமானால் இதை உபயோகியுங்கள். ஆண் பெண்கள் இதை காலை மாலை சாப்பிட்டுக் கொண்டுவர வெள்ளை, திரேகமெல்லாம் சதா அனல் கை கால் எரிச்சல், நீர் எரிச்சல், ஆசனக் கடுப்பு. அதிக உஷ்ணத்தால் நித்திரை இல்லாமை ரத்தக்கொதிப்பு மூளைக்கொழுப்பு, உள்ளங்கை உள்ளங்கால எரிச்சல், சொட்டு மூத்திரம், அதிக நீர் போகது, நாசியால் இரத்தம் வருதல் எலும்புருக்கி, அஸ்தி வெட்டை, கைகால் எரிச்சல், மயக்கம், சோப்பல். கண் எரிச்சல், உஷ்ணத்தினால் தலைமயிர் உதிருதல் சொரி கணைசூடு, சிரங்கு, கொப்பவெட்டை மலச்சிக்கல், உஷ்ணத்தினால் உண்டான வியாதி எல்லாம் போய் திரேகத்தை தககமயமாக்கும். இந்தியாவில் 100க்கு 75 பேர் உஷ்ண சரீரத்தை உடையவராக இருக்கிறார்கள். ஆகையால் இதை சாப்பிட்டு ஆனந்தமடையுங்கள்.

10-நாள் சாப்பிடக்கூடிய மருந்து ரூ. 1-12-0 20-நாள் சாப்பிடக்கூடிய மருந்து ரூ. 3-0-0 வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

பினாங்கு, சிங்கப்பூர் முதலிய வெளியூர் வாசிகள் முன் பணம் அனுப்பவும்.

எமது விலாசம்:— **A. S. வைத்தியசாலை,** 8-வது பீட்டு, வேப்பேரி போஸ்டு மதராஸ்.

இந்தியா
தனிப்பிரதி
விலை அரையணா
இலங்கை
இந்தியாவுக்கு
வருட சந்தா
2—8—0
இலங்கையில்
தனிப்பிரதி சதம் 6
ஒரு வருஷத்திற்குக்
குறைந்த சந்தா
கிடையாது.

தமிழ் மணி

பர்மா, மலாய
தனிப்பிரதி 0-1-8
வருட சந்தா
ரூ. 4—0—0
ஒரு வருஷத்திற்கு குறைந்த
சந்தாவுக்குப் பத்திரிகை அனுப்பப்
பட மாட்டாது.

[illegible] என்னும் அடிமை [illegible] ஜாதியில்
[illegible] கொண்ட மனிதரே [illegible] இந்தியாவில் இல்லையே,

என்று தணியு மிந்த சுதந்திர தாகம்?
என்று மடியு மெங்கள் அடிமையில் மோகம்?—பாரதி

தயா[illegible]கிவிட்டது! * * தயாராகிவிட்டது!!

சொக்கநாதன்

அல்லது

ரங்கன் திருவிளையாடல்

என்னும் நாவல்
வெளிவந்து விட்டது

காதல், சோகம், ஹாஸ்யம்,
திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்த
முதல்தரமான துப்பறியும் கதை

உடனே ஆர்டர் கொடுங்கள் விலை 12 அணா.

முன்பணமாக அனுப்பவும். -::- வி. பி. யில் அனுப்பிவைக்கப்படமாட்டாது.

இந்தியாவிற்கு தபால் செலவு உள்பட ரூ. 1-0-0

பர்மா, மலாய் முதலிய அந்நிய நாடுகளுக்கு தபால் செலவு உள்பட ரூ. 1-2-0

மானேஜர்:-
"தமிழ் மணி" ஜி. டி. மதராஸ்

Edited, Printed and Published by, P. ALBIN at the "TAMIL MANI" Press, 31, Sembudoss St., G. T. Madras.